They are used to address the children, and they are used metaphoric (M. indicates male, F. female)

ponni (M.F.) 'gold'
paṭṭi (M.F.) 'silk'
kaṇṇi (M.F.) 'eye'
kaṇṇā / kaṇṇē (M.F.) 'eye'. ā, ē are vocative suffixes
rājā (M.F.) 'king'
kaṇṇammā "mother eye' (F). *ammā* 'mother' is added to *kaṇṇi* 'eye'
rājāṯi 'princess' (F.). *ṯi* is feminine suffix

3.2 Kinship Terms

Only terms referring to father and mother alone are used.

apā (M.F.) 'father'
ammā (M.F.) 'mother'
ayyā (M.F.) 'father; grandfather'

3.3 Abusive and disgraceful Terms

There is a folk belief that when abusive expressions are used to refer to children, they keep away the casting of evil eyes and hence the children will grow healthy and live long. These expressions convey the meaning just the opposite, what they wish for.

ollipici (M.F.) 'thin child'
alpāyisi (M.F.) 'short life'
tiriṭikaḷḷi (F.) 'thief'
tiriṭikaḷḷε (M.) 'thief'
tiriṭipayε (M.) 'thieving boy'
cinnε payε (M.) 'small boy'
cuṭipayε (M.) 'mischievous boy'
muṭāpayε (M.) 'dull boy'
mūḍi (M.F.) (meaning not clear); may be Goodness of ugliness, elder sister of Lakshmi, shortened form of mūdēvi
mūdēvi (M.F.) Goddess of ugliness
moṭε (M.F.) 'bald head'
maki (M.F.) 'dull one'
vāṇḍi (M.F.) 'thin child; small child'

3.4 Names of animals and birds

kuṭi (F.) 'young one of animals'
kuṭipayε (M.) "
koraṅgi (M.F.) 'monkey'
kunji (M.F.) 'young one of birds'
kaẓidε (M.F.) 'donkey'
naṇḍi (M.F.) 'crab'
nāy (M.F.) 'dog'

3.5 Terms referring to children

puḷḷε (M.F.)
pāpā (F.)
api (M.)

3.6 Address terms

yēli (M.)
ḍē (M.)
ḍī (F.)

3.7 Endearing term

cellō (M.F.)

3.8 English expressions

sār (M.) - sir
maynar (M.) minor

FOOT NOTES

1. Items marked * are the intermediate hypothetical forms, not actually found CDT.

2. The expression free variation is used not as the traditional linguistic term. Here it implies that certain phonemes which are replaced in certain lexical items are retained in other items.

3. My grandson, at the age of 1 1/2 years, developed using mam for fruits, though nobody used that form in my family. Then we adults started using mam, when we wanted to offer him fruits. Perhaps, he might have picked up this syllable from maambazo 'mango fruit', which we have been using and which he liked most among fruits.

BIBLIOGRAPHY

Cruttenden, Alan, *Language in Infancy and Childhood*, Manchester University Press, 1979

பாரதியின் தேசியம்-ஒரு வரலாற்று பின்புலம்

அ. பாண்டுரங்கன்

0. தமிழ் இலக்கிய வரலாற்றின் திருப்பு முனையாகத் திகழ்ந்தவன் பாரதி. அவன் காலத்தால் உருவான கவிஞன்; காலத்தை உருவாக்கிய கவிஞன். தமிழ்மொழிக்கும் இலக்கியத்திற்கும் ஓர் அகன்ற பார்வையை இந்திய தேசியப் பார்வையை, உலகப் பார்வையைக் கொடுத்தவன் பாரதி. அக் கவிஞனுடைய பாடல்களிலும் கட்டுரை களிலும் சொற்பொழிவுகளிலும் வெளிப்படுகின்ற தேசியம் பற்றி—அதன் உருவாக்கம், பரிணாமம், எல்லை, வீச்சு பற்றி—இக்கட்டுரை ஆராய முனைகின்றது.

0.1. தேசியம் என்ற சொல் Nationalism என்னும் ஆங்கிலச் சொல்லின் மொழி பெயர்ப்பாக வழங்கப்படுகின்றது. தேசியம் என்னும் கருத்து ஐரோப்பிய வரலாற்றைப் பொறுத்த அளவில் மிக அண்மைக் காலத்தது ஆகும். எனினும் தேசியத்தின் அடிப்படைக் கூறுகள் மனித குல வரலாற்றில் அவ்வப்போது வெளிப் பட்டு நிற்பதைக் காணலாம். இது வரலாற்றில் தவிர்க்க முடியாத வெளிப்பாடாகத் தன்னைக் காட்டிக் கொள்ளுகின்றது. வரலாற்றின் முக்கிய கட்டங்களில் தேசியம் ஓர் உந்து சக்தியாக விளங்குவதைக் காண இயலும். தேசிய வாதம் ஐரோப்பாவில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றியது. தேசிய வாதத்தின் தோற்றத்தைப் பற்றிக் கூறும்பொழுது அது

> "நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பின் வீழ்ச்சியில், முதலாளித்துவம்
> பெற்ற எழுச்சியில்......உருக்கொண்டதென்று"
>
> (மணி.பெ.சு., இ.தே.தோ.வ , பக்.13)

விளக்கப்படுகின்றது. தேசம், தேசப்பற்று, தேசியம், தேசிய இனம், தேசிய அரசு ஆகிய கருத்துக்கள் தம்முள் தொடர்புடையன; ஒன்று மற்றொன்றுக்கு அடிப்படை யாக, துணையாக அமைவன.

0.1.1 தமிழக வரலாற்றையும், தமிழ் இலக்கிய வரலாற்றையும் ஒருங்கு வைத்துக் காணும்பொழுது இன்றைக்கு நாம் கருதுகின்ற தமிழ்த் தேசியக் கருத்து, அதன் வெளிப்பாடான நாடு உருவாகவில்லை என்றே சொல்ல வேண்டும். வண்பொழில் மூவர் தண் தமிழ் வரப்பின் என்று கூறப்பெற்றபோதிலும் தமிழகம் முழுவதும் ஒன்று பட்டு ஒரு தமிழ்த் தேசிய இனம் என்னும் கருத்து உருவாக்கம் பெறவில்லை என்றே தோன்றுகின்றது. சிலப்பதிகாரம் ஒன்றே இத்தகு போக்குக்கு விதிவிலக்காக அமைகின்றது. தமிழ்நாட்டு மூவேந்தர்களைக் குறித்து இளங்கோவடிகள் பாடி யுள்ள திறம் தேசிய உருவாக்கத்தின் கருவாக உள்ளது. செங்குட்டுவனின் வட நாட்டுப் படையெடுப்பைப் பற்றிக் கூறும்பொழுது,

> "காவா நாவிற் கனகனும் விசயனும்
> விருந்தின் மன்னர் தம்மொடுங் கூடி
> அருந்தமி ழாற்ற லறிந்தில ராங்கெனக்
> கூற்றக் கொண்டிச் சேனை செல்வது"
>
> (சிலப். 26: 159—162)

என்று அதனைத் தேசியப் பார்வையில்—இன மான உணர்வுப் பார்வையில் பார்க்கின்ற இளங்கோவடிகள் தமிழ்த் தேசியத்தின் தலைமகனாகத் தோன்றுகின்றார்.

2. பாரதியின் தேசியப் பார்வையைக் காணுமுன் அவனுடைய வாழ்க்கை வரலாற்றைச் சற்று, கவனிக்க வேண்டும். இளமையிலேயே தாயையும் இளங் காளைப் பருவத்திலே தந்தையையும் இழந்த பாரதி தன் அத்தை குப்பம்மாள், அவர் கணவன் கிருஷ்ணசிவன் ஆதரவில் காசியில் 1898 முதல் 1902 வரை வாழ்ந்தான். அங்கு வாழ்ந்த காலத்தில் திருநெல்வேலியில் நின்றுவிட்ட படிப்பை ஈடுகட்டும் முறையில் அலகாபாத் பல்கலைக் கழகத்தில் நுழைவுத் தேர்வு எழுதி வெற்றி பெற்றான். இந்தி, வடமொழி போன்ற மொழிகளைக் கற்றான். 1903ஆம் ஆண்டு எட்டயபுரத்திற்குத் திரும்புகின்றான்; எட்டயபுரத்திலும் அவனால் நீண்ட காலம் இருக்க முடியவில்லை. சுதந்திர வேட்கையையும் புதிய எண்ணங்களையும் சுமந்து கொண்டிருந்த பாரதியால் எட்டயபுரத்தில் முடங்கிக் கிடக்க இயலவில்லை. மதுரையில் சில திங்கள் தமிழாசிரியப் பணி ஆற்றுகின்றான். இறுதியில் 1904ஆம் ஆண்டில் ஜி. சுப்பிரமணிய அய்யர் அழைப்பினை ஏற்றுச் சுதேசமித்திரன் நாளிதழின் துணை ஆசிரியராகச் சென்னையில் பணியேற்கிறான். தேசிய இயக்கமான காங்கிரசோடு இவன் தொடர்பு நெருக்கமாகின்றது. வ.உ. சிதம்பரம் பிள்ளை சுப்பிரமணிய சிவா போன்ற தேச பக்தர்களுடன் நெருங்கிய தொடர்பு ஏற்படுகின்றது. தமிழகத் தேசியத் தலைவரான வ.உ. சிதம்பரனாரின் தலைமையில் காங்கிரசுக் கூட்டங்களுக்குக் கவிஞன் செல்லுகிறான் : காங்கிரசின் தீவிரவாதத் தலைவர்களான பாலகங்காதர திலகர், விபின சந்திர பால், லாலா லஜபதிராய் அரவிந்தர் ஆகியோருடைய நேரடித் தொடர்பு பாரதிக்குக் கிட்டுகின்றது. விவேகானந்தரின் சீடரான சகோதரி நிவேதிதையைச் சந்தித்து அவரைக் குருவாக ஏற்றுக் கொள்ளுகிறான், பாரதி. மிதவாதியான சுப்பிரமணிய ஐயரால் நடத்தப்பெற்ற சுதேசமித்திரனில் பாரதி தன் உணர்ச்சி முழுவதையும் வெளிப்படுத்த இயலவில்லை. தீவிரத் தேசியவாதத்தில் ஈடுபாடுகொண்ட மண்டயம் சகோதரர்களின் தொடர்பால் இந்தியா பத்திரிகை உருவாகின்றது. அப்பத்திரிகையில் கனல் தெறிக்கும் கவிதைகளையும் கட்டுரைகளையும் படைக்கின்றான் பாரதி. சக்கரவர்த்தினி, பாலபாரதா (ஆங்கிலம்) என்ற இதழ்களிலும் அவன் எழுத்துகள் இடம்பெறுகின்றன. திருநெல்வேலியில் வ.உ.சி., சுப்பிரமணிய சிவா ஆகியோர் கைது செய்யப்பட்டுக் கடும் தண்டனை பெறுகின்றனர். இந்தியா பத்திரிகை மீதும் ஆங்கில அரசின் கண்காணிப்பு மிகுதியாகின்றது. நண்பர்களின் தூண்டுதலின் பேரில் 1908ஆம் ஆண்டில் பிரஞ்சு இந்தியாவில் இருந்த புதுச்சேரிக்குப் பாரதி போய்ச் சேருகின்றான். இந்தியா பத்திரிகை புதுச்சேரியில் மீண்டும் தொடங்கப்பட்டு பிரிட்டிஷ் அரசு மீது நெருப்புமழை பொழிகிறது இந்தியா பத்திரிகை, பிரிட்டிஷ் இந்தியாவில் நுழையாதவாறு ஆங்கில அரசு கடும் நடவடிக்கை எடுக்கின்றது. இந்தியா பத்திரிகை நின்றுவிடுகின்றது. 1910இல் புதுவைக்கு அரவிந்தர் வருகின்றார்; வ.வே.சு. அய்யரும் புதுவை வந்து சேர்கின்றார். புதுவையில் விஜயா என்ற நாளிதழையும் சூர்யோதயம் (தமிழ்). பால பாரதா (ஆங்கிலம்) என்ற வார இதழ்களையும் கர்மயோகி என்ற திங்கள் இதழையும் பாரதி நடத்துகின்றான். 1918இல் புதுவையை விட்டு வெளியேறி இரண்டு ஆண்டுகள் மனைவியின் ஊரான கடையத்தில் வாழ்கிறான். இக்காலக் கட்டத்தில் திருவனந்தபுரம். காரைக்குடி' கானாடு-காத்தான் போன்ற பல இடங்களுக்குச் சென்று சொற்பொழிவுகள் ஆற்றுகின்றான். 1921ஆம் ஆண்டில் மீண்டும் சுதேசமித்திரனில் துணை ஆசிரியராகப்

பொறுப்பேற்றுத் தன் இறுதிக் காலம் வரை (1921 செப்டம்பர் 12) கட்டுரைகள் எழுதுகின்றான்.

2.1. தேசியத்தின் பின்னணியும் இங்கே கவனிக்கத் தக்கது. 1857இல் தோன்றிய சிப்பாய்க்கலகம் இந்து—முஸ்லிம் ஒற்றுமையின் சின்னமாக விளங்கியது; இந்து, இஸ்லாமிய இராணுவ வீரர்கள் தோளோடு தோள் இணைந்து ஆங்கிலேய ருக்கு எதிராக வெகுண்டெழுந்து போரிட்டனர்' இந்து சந்நியாசிகளும் இஸ்லாம் மௌல்விகளும் இவ்விடுதலை இயக்கத்தில் பங்குகொண்டனர். இவ்வியக்கம் தோல்வியைத் தழுவியது. என்றென்றும் இந்தியாவைத் தன் பிடிக்குள் வைத்திருக்க முடிவு செய்த ஆங்கிலப் பேரரசு, மெக்காலே வகுத்த கல்விக்கொள்கையைப் பின் பற்றி இந்தியர்களை ஆங்கிலேயர் மயமாக்க முயன்றது. அரசின் துணையுடன் தொடங்கப்பெற்ற கிறித்தவப் பாதிரிகளின் பள்ளிகளின் வாயிலாக ஆங்கிலத்தையும் கிறித்தவத்தையும் போதித்து, தனக்குத் துணைபுரியும் ஒரு மத்தியதர வர்க்கத்தை உருவாக்க முனைந்தது. இதனைக் குறித்து இராஜாஜி குறிப்பிடுவது இங்கு கருதத் தக்கது.

> "அந்நியர் ஆக்கிரமிப்பைக் கண்டு மக்களின் உள்ளம் கொதிப் படைவதற்குப் பதிலாக ஆங்கிலேயரைக் குரு ஸ்தானத்தில் வைத்து மதித்துப் போற்றி அவர்களுடைய அடிச் சுவட்டைப் பின்பற்றிச் செல்ல முயலும் ஆங்கிலம் படித்த கூட்டம் ஒன்று நாட்டில் முளைத்து வளர்ந்தது" (மணி, பெ.சு.இ.தே.தோ.வ.ப. 37, மேற்கோள்)

இதன் விளைவாக இந்திய வரலாறும் நாகரிகமும் திரித்துக் கூறப்பட்டன; இந்தியாவை நாகரிகப்படுத்துவதற்காகவே கடவுள் தங்கள் ஆட்சியை இந்தியாவில் ஏற்படுத்தினார் என இந்தியர்கள் நம்பும்படி ஆங்கிலக் கல்வி அமைந்தது. ஆங்கிலக் கல்வி கற்ற அறிஞர்கள் இந்து சமயத்தில் படிந்திருந்த கறைகளைத் துடைத்து ஒரு புத்துயிர்ப்பைத் தோற்றுவிக்க முனைந்தனர். இராஜாராம் மோஹன்ராய், தயானந்த சரசுவதி போன்றோரும் அவர்கள் தோற்றுவித்த இயக்கங்களும் படித்த இந்தியர் களிடையே புது விழிப்பை ஏற்படுத்தின. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஆங்கில ஆட்சிக்கு எதிரான கசப்புணர்வு நீறுபூத்த நெருப்புப் போன்று அடங்கியிருந்தது.

இந்நிலையில் படித்த நடுத்தர வர்க்கத்தைத் தொடர்ந்து தன் பிடியில் வைத் திருக்க எண்ணிய ஆங்கில அரசு அதிகாரப் பங்கீடு தரும் முறையில் காங்கிரஸ் மகாசபை தோன்றத் துணை செய்தது. அன்றைய காலகட்டத்தில் இந்தியாவின் அரசப் பிரதிநிதியாக இருந்த டப்ரின் பிரபுவின் ஆசியுடன் அவருடைய நண்பரான ஆலன் ஆக்டோவியன் ஹ்யூம் முயற்சியால் 1885 ஆம் ஆண்டு டிசம்பர் 28ஆம் நாள் சிம்லாவில் காங்கிரஸ் கூடியது. மத்தியிலும் மாநிலங்களிலும் உள்ள சட்ட மன்றங்களிலும் அரசு ஊழியத் துறையிலும் இந்தியர்களுக்குப் பங்களிக்க வேண்டும் என்னும் கருணை மனுக்கள் கோரிக்கைகளாக வைக்கப்பட்டன.

2.2. ஆங்கில ஆட்சியின் பிரித்தாளும் கொள்கையைத் தீவிரமாக நிறை வேற்றத் தொடங்கினார் கர்சான் பிரபு. 1905ஆம் ஆண்டு வங்காளத்தைக் கிழக்கு, மேற்கு வங்காளங்களாகப் பிரித்தார். இந்து வங்காளம் முஸ்லிம் வங்காளம் என்று பெயர் கூறப்படாவிட்டாலும் அது நிர்வாக சௌகரியத்தைக் காரணமாகக் காட்டிப்

பிரித்தாள முயன்ற நடவடிக்கையே ஆகும். இந்நடவடிக்கையை வங்காள இந்துக்களும் முஸ்லிம்களும் இணைந்து எதிர்த்தனர். வங்காளத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் இந்திய நாட்டின் பல பகுதிகளிலும் எதிரொலித்தன. வங்க தேசியம் இக்காலக்கட்டத்தில் இந்திய தேசியமாக மலர்ச்சிபெறத் தொடங்கியது. "வந்தே மாதரம்" என்று சொன்னாலே கடும் தண்டனை விதிக்கப்பட்டது. "தென்னாட்டுத் திலகர்" எனப் புகழ் பெற்றிருந்த வ.உ. சிதம்பரனார் அன்றைய காலக்கட்டத்தில் "வந்தே மாதரம் பிள்ளை" என்று அழைக்கப்பெற்றார் என்பது நினைக்கத் தக்கது (மணி, பெ. சு., இ. தே. தோ. வ. ப. 78). பாரதியின் "வந்தே மாதரம் என்போம்" என்ற பாடலை இவ்வரலாற்றுப் பின்னணியில் காணவேண்டும்.

"வந்தே மாதர மென்போம்—எங்கள்
மாநிலத் தாயை வணங்குது மென்போம்"
"வந்தே — மாதரம் — ஜய
வந்தே மாதரம்"
"......வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கேனோ?"
(பாரதியார் கவிதைகள், மெர்க்குரி புத்தகக் கம்பெனி)

2.3. இந்தியத் தேசிய உணர்வு அரசியல் அடிப்படையில் அண்மைக் காலத்தில் தான் வளர்ச்சி பெற்றதாயினும் இந்திய ஒருமைப்பாடு சமய, பண்பாடுகளின் அடிப்படையில் தொன்றுதொட்டே நின்று நிலவி வருவதை நாம் இலக்கியங்கள் வாயிலாகக் காணுகின்றோம். காசி-இராமேசுவர யாத்திரைகள் இதனை நமக்கு உணர்த்துகின்றன. பொதியமும் இமயமும் சங்க இலக்கியங்களில் இணைத்துப் பேசப்படுகின்றன. பாண்டியர்கள் தங்களைக் குரு மன்னர்களோடு தொடர்பு படுத்திக் கவுரியன், சந்திர குலத்தவன் என்று பேசுவதும் சோழர்கள் தங்களைச் சிபியின் மரபினராகவும் சூரிய வமிசத்தினராகச் சித்திரிப்பதும் இத்தகு பண்பாட்டுக் கலவையின் விளைவுகள் என்பதைத் தெளிவாக உணரலாம். வடநாட்டின் மீது படையெடுத்துச் சென்ற செங்குட்டுவன் இமயத்தில் வாழும் அந்தணர்களைக் காக்க வேண்டும் என்ற வேண்டுகோள் விடுக்கின்றனர் பொதிய மலைக்குச் செல்லும் முனிவர்கள்.

"செஞ்சடை வானவ னருளினில் விளங்க
வஞ்சித் தோன்றிய வானவ கேளாய்
மலயத் தேகுதும் வான்பே ரிமய
நிலயத் தேருத னின்கருத் தாகலின்
அருமறை யந்தண ராங்குளர் வாழ்வோர்
பெருநில மன்ன காத்தனின் கடனென"

(சிலப்பதிகாரம், 26: 98—103)

என்று கூறுவது இக்கருத்துக்கு அரண்செய்கின்றது. நாளந்தா போன்ற பல்கலைக் கழகங்களில் திந்நாகர், தர்மபாலர் போன்ற தமிழர்கள் பணியாற்றியமையும் பௌத்த சமய நூல்கள் சிலவற்றிற்குக் காவிரிப்பூம்பட்டினத்தில் உரையெழுதப்பட்டமையும் இந்தியாவின் பண்பாட்டொருமையை—அவன் வலிமையைக் காட்டுகின்றன. அரசியல் வழியில் இந்தியப் பெருநிலம் பிளவுண்டு கிடந்த போதிலும் வெவ்வேறு

அரசுகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டுப் பகைத்துக்கொண்டு வாழ்ந்த போதிலும் இவை நாட்டில் பிரிவினைப் போக்கை வளர்க்கவில்லை. மொழி வழித் தேசியம் உருவாகாத அக்ககாலக் கட்டத்தில் பண்பாட்டுத் தேசியமே மேலோங்கி நின்று இந்திய மக்களைச் சிதறுண்டு போகாமல் காப்பாற்றியது. ஒவ்வொரு பகுதியும் தன் தனித்தன்மையைக் காலம் காலமாகப் பேணிக் காத்து வந்ததொடு இந்தியர், இந்துக்கள் என்ற ஒருமைப்பாட்டையும் பேணி வளர்த்துள்ளது. இவ்வுணர்வு இல்லா விட்டால் தென்னாட்டவர்களான சங்கரரும் இராமானுஜரும் காஷ்மீரம் வரை சென்று கொள்கைகளைப் பரப்பியிருக்க இயலாது. பழைய மரபுகளும் இயக்கியங்களும் இப் பண்பாட்டு ஒருமையைக் கட்டிக் காத்து வருவதை நாம் எண்ணும்பொழுது அவை நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. பாரதி இத்தகையதொரு இந்தியப் பண்பாட்டு மரபில் வருகின்றவன் என்பதை அவனுடைய பாக்கள் பறைசாற்றுகின்றன.

"பாருக்குள்ளே நல்ல நாடு — எங்கள்
பாரத நாடு"

"மன்னு மிமயமலை யெங்கள் மலையே
மாநில மீததுபோற் பிறிதிலையே
இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே
இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே?
பன்னரு முபநிட நூலெங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூலிது போலே!
பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே
போற்றுவ மிஃதை யெமக்கிலை யீடே."

"ஜய பாரத" என்ற பாட்டு

"முன்னை யிலங்கை அரக்கர் அழிய
முடித்தவில் யாருடை வில்?—எங்கள்
அன்னை பயங்கரி பாரததேவிநல்
ஆரிய ராணியின்வில்"

"எங்கள் தாய்"; என்ற பாட்டு

வெறிகொண்ட தாய்" என்ற பாட்டு

(பாரதியார் கவிதைகள், மெர்க்குரி புத்தகக் கம்பெனி)

2.4. தேசிய உணர்வின் அடிப்படைக் கூறுகளுள் ஒன்றான மொழி, தேசிய முணர்ச்சியின் வளர்ச்சிக்கு உந்துவிசையாயிற்று. வங்காளப் பிரிவினைக்குப் பின்னர் ஏற்பட்ட தேசிய வெள்ளம் அவ்வப் பகுதிகளில் வழங்கிய தாய்மொழியின் வாயிலாகவே வெளிப்பட்டது. வங்கமொழி வாயிலாக அரவிந்தர், விபின சந்திர பாலர் போன்ற தேசத் தலைவர்களும், மராத்தி மொழி வாயிலாகப் பாலகங்காதர திலகரும் தமிழ் மொழி வாயிலாக வ.உ. சிதம்பரனார், சுப்பிரமணிய சிவா, பாரதி ஆகியோரும் தேசிய உணர்ச்சியைத் தட்டியெழுப்பினர். மொழிவழித் தேசியம் குறித்து, திலகர் கூறும் கருத்து இங்கு நினைக்கத் தக்கது.

''மொழி, இன அடிப்படையில் மாநிலங்களைச் சீரமைத்து,
மத்திய அதிகாரத்தின் கீழ் இயங்கும் ஒரு சமஷ்டியை
உருவாக்க வேண்டும்'' (பெ.சு. மணி, இ.தே.தோ.வ.ப. 500)

16.03.1907 இல் தான் நடத்திய 'இந்தியா' வார இதழில் பாரதி தேசியத்தை ''ஜாதிய அறிவு'' என்று குறிக்கின்றான். NATIONALISM ''ஜாதீய அறிவு'' என்ற தலைப்பையிட்டு, பாரதி கூறும் கருத்துக்கள் எண்ணத் தக்கன. இந்தியா ஒரு நாடு (Nation) அல்ல என்பாரின் கூற்றைப் பாரதி ஏற்க மறுத்து, பன்முறை தான் அதனைக் கண்டித்திருப்பதை நினைவு கூர்கிறான். தன் கருத்துக்கு அரண்செய்யும் வகையில் சி. இராமலிங்க ரெட்டி பேசிய பேச்சை மேற்கோள் காட்டுகின்றான்.

''இந்தியாவில் பிறந்து, இந்தியாவிலே வளர்ந்த இந்நாட்டின் க்ஷேம லாபங்களையே தமது க்ஷேம லாபங்களாக வுடைய எல்லா வகுப்பினரும் ஒரே ஜாதியென்று, அந்த ஜாதி முழுமையும் உன்னதம் பெறுவதற்குரிய வழிகளை அனுசரிக்க வேண்டுமென்ற ஞானமே இந்திய ''ஜாதீய ஞானம்'' என்று கூறப்படும் இந்தியா பல பல பாஷைகளையும் மதங்களையும் இனங்களையும் உடைய நாடாதலால் இங்கே ஜாதீய ஞானம் ஏற்படுவது இயற்கை விரோத மென்று சிலர் கூறுகிறார்கள். இதை நாம் எத்தனையோ முறை கண்டனம் செய்து எழுதியிருக்கின்றோம். சென்ற புதன் கிழமை மாலை சென்னை ''பால பாரத சங்க;'த்தின் ஆதாயத்தின் கீழ் கேம்பிரிட்ஜ் பட்டதாரராகிய ஸ்ரீ.ஸி. ராமலிங்க ரெட்டி செய்த திறமை மிகுந்த உபந்நியாசத்திலே நமது நோக்கத்தைத் தழுவிப் பேசியது பற்றிச் சந்தோஷமடைகின்றோம். ஜாதீய ஞானம் ஏற்படுவதற்கு பாஷைகள், மதங்கள் இவை சிறியதேனும் தடையாகமாட்டா வென்பதை ஸ்ரீ ராமலிங்க ரெட்டி நன்கு வற்புறுத்திப் பேசினார்''

(பாரதி தரிசனம்-2, ப.63)

தமிழ்த் தேசியத்திற்கும் இந்தியத் தேசியத்திற்கும் முரண்பாடு இல்லை என்று பாரதி கருதுகிறான். இந்தப் பின்புலத்தில் அவனுடைய பாடல் வரிகளான

''வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!
....
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!''

(பாரதியார் கவிதைகள், மெர்க்குரி புத்தகக் கம்பெனி)

என்பதைப் பயில வேண்டும். இந்தியத் தேசியத்தில் தமிழ்த் தேசியம் உயிர்ப்புடன் திகழ முடியும என்று பாரதி கருதுகின்றான். தேசியம் குறித்து பாரதி வாய்ப்பு நேர்கின்ற பொழுதெல்லாம் எழுதுகின்றான். ''புனர்ஜென்மம்'' என்னும் கட்டுரையில் அவன் கூறும் கருத்துகளைக் காண்போம்.

''கிறிஸ்தவர்களாயினும், பார்ஸிகளாயினும் மகமதியராயினும் எங்கிருந்து வந்து எந்த இஷ்ட தெய்வத்தைக் கொண்டாடிய போதிலும், பாரத பூமியிலே பிறந்து வளர்ந்து இதையே சரணாகக் கொண்ட மனிதர்களையெல்லாம் பாரத ஜாதி

யிலே சேர்த்துக் கணக்கிட வேண்டும். இது ஒரே ஜாதி; பிரிக்க முடியாதது அழிவில்லாதது.''

(மகாகவி பாரதியார் கட்டுரைகள்—தத்துவம் பக். 53–54)

கங்கையில் சேரும் வாய்க்கால்கள் எல்லாம் கங்கை ஆறாக மாறுகின்றன; பாரத தேசத்தில் குடியேறித் தலைமுறை தலைமுறையாய் வாழ்பவர்கள் எல்லாம் இந்தியர் கள்; பாரத மக்கள் என்று பாரதி கருதியிருப்பது தெளிவாகின்றது. இவனுடைய தேசியப் பார்வையில் மொழிக்கும் மதத்திற்கும் இடமில்லை. இவை அனைத்தையும் கடந்த நிலையில் இந்திய மக்கள் கூட்டம் என்னும் நிலையில், பாரத சமுதாயம் பற்றிப் பாரதி பாடுகின்றான்

''முப்பது கோடி முகமுடையாள் உயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள்—இவள்
செப்புமொழி பதினெட்டுடையாள்—எனில்
சிந்தனை ஒன்றுடையாள்.''
''அறுபது கோடி தடக்கைகளாலும்
அறங்கள் நடத்துவள் தாய்''
''விதமுறு நின்மொழி பதினெட்டுங் கூறி
வேண்டிய வாறுனைப் பாடுதுங் காணாய்''

(பாரதியார் கவிதைகள், மெர்க்குரி புத்தகக் கம்பெனி)

தேசியத்தை ''ஜாதீய ஞானம்'' என்று குறிப்பிட்ட பாரதி, அத் தேசியத்திற்கு அடிப்படையாக விளங்குபவைகளை ''ஆர்யஸம்பத்து'; என்கிறான். அதனை அவன் ''புனர்ஜன்மம்'' என்னும் கட்டுரையில் விளக்குகிறான்.

''நமது வேதம், நமது சாஸ்திரம், நமது ஜனக்கட்டு நமது பாஷைகள், நமது கவிதை, நமது சிற்பம், நமது ஸங்கீதம், நமது நாட்டியம், நமது தொழில் முறை கள், நமது கோபுரங்கள், நமது மண்டபங்கள், நமது குடிசைகள்—இவை அனைத்துக்கும் பொதுப்பெயர் 'ஆர்ய ஸம்பத்து' காளிதாசன் செய்த சாகுந்தல நாடகம் ஹிந்தி பாஷையிலே துளஸீதாஸர் செய்திருக்கும் ராமாயணம், கம்ப ராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள், ஆண்டாள் திருமொழி, இவை யனைத்துக்கும் பொதுப் பெயராவது ஆர்ய ஸம்பத்து...எனவே ஆர்ய ஸம்பத் தாவது ஹிந்துஸ்தானத்தின் நாகரிகம். இந்த ஸம்பத்தைப் பாதுகாக்கும் வரையில் இந்த ஜாதிக்கு உயிருண்டு. இந்த ஸம்பத்திலே துருப்பிடிக்க இடம் கொடுத்தால் இந்த ஜாதியைச் செல் அரித்துவிடும்''

(மகாகவி பாரதியார் கட்டுரைகள், ப.54)

பாரதியின் மெய்ஞ்ஞானம் என்னும் நூலை இயற்றிய ந. இரவீந்திரன் பாரதியின் இக்கருத்தை எடுத்துரைத்து,

''இந்த வரையறைக்குள் பாரதி இஸ்லாமிய மக்களைச்
சேர்த்துக் கொள்ளவில்லை''

(பாரதியின் மெய்ஞ்ஞானம், ப.29)

என்று கூறுவது பொருத்தமர்கத் தோன்றவில்லை. "புனர்ஜன்மம்" என்னும் கட்டுரையின் தொடக்கத்திலேயே இந்தியாவில் வாழும் அனைவரும் பாரத ஜாதி யினரே—இந்தியரே என்று குறிப்பிட்டிருப்பதை நாம் முன்னரே கண்டோம்.

2.5. இன்னொன்றையும் நாம் கருத வேண்டும். 1905ஆம் ஆண்டில் நடை பெற்ற வங்கப் பிரிவினை நாட்டில் ஒரு பெரும் புயலைக் கிளப்பிவிட்டது. திலகர், விபின சந்திர பாலர் போன்ற தீவிரவாதிகள் தம் தீவிரவாதத்தை ஒரு சமயக் கொள்கையாகவே உருவாக்கினர். பங்கிம் சந்திரர் இயற்றிய "வந்தே மாதரம்" என்னும் பாடல் இந்தியத் தாயை இந்துக்களின் தெய்வமான காளியாக உருவகித்தது. கொடுமைகளைக் கண்டு வெகுண்டெழும் மாகாளி பராசக்தியாகவும் தன்னை எதிர்ப்போரைத் துகளாக்கும் பவானியாகவும் கொடுந் துர்க்கையாகவும் பாரத மாதா உருவகிக்கப்பட்டாள். வங்க தேசிய வாதிகள் பாரதத்தைக் காளியாகக் கண்ட அதே கால கட்டத்தில் திலகர் சிவாஜியின் வீர வரலாற்றை நினைவுறுத்தி மக்களைத் தட்டியெழுப்பினார். இந்து சமய மறுமலர்ச்சிக்காக மொகலாயர்களை எதிர்த்துப் போரிட்ட சிவாஜி தேசிய இயக்கத்தின் இலட்சியத் தலைவராக்கப்பட்டு வீர வழி பாட்டுக்குரிய வராகின்றார். விநாயகர் வழிபாட்டையும் தேசிய எழுச்சிக்குக் கருவி யாகப் பயன்படுத்திக்கொள்ளவும் திலகர் தயங்கவில்லை. லாலா லஜபதிராய் போன்ற பாஞ்சாலத் தலைவர்கள் மொகலாயர்களை எதிர்த்து உயிர்துறந்த சீக்கிய குரு கோவிந்தசிங்கின் வீரத்தை நினைவுபடுத்தி அரசியல் ஆவேசத்தை ஏற்படுத்து கின்றனர்.

இந்து சமய நூல்களையும் தேசிய இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்ளக் காங்கிரஸ் தீவிரவாதிகள் தயங்கவில்லை, ஆங்காங்கு வெகுண்டெழுந்த இளைஞர்கள் தனிநபர்களைக் கொல்லும் பயங்கர வாதத்தில் இறங்கினர். திலகர், அரவிந்தர் போன்றோர் இதனை வெளிப்படையாக ஆதரிக்காவிட்டாலும், இவை தவிர்க்க முடியாதவை என்று கருதினர். பாலகங்காதர திலகர் கீதையைத் தன் அரசியல் கருத்துகளுக்கு விளக்கம் தரும் நூலாகக் கையாண்டார்; "கீதா ரகஸ்யம்" என்னும் புத்துரையை இயற்றினார். விடுதலை பெற்ற பாரதத்தில் "ஸநாதன தர்மமே" நிலைபெறும் என்றார் அரவிந்தர். இக்கொள்கையின் பாதிப்புகளை நாம் பாரதியின் பாடல்களில் காண முடிகின்றது.

வங்க தேசபக்தர்களைப் போன்று பாரதியும் பாரதத் தாயைக் காளியாக, துர்க்கையாக, பயங்கரியாக, மாகாளியாக உருவகிக்கின்றான் "எங்கள் தாய்" என்னும்பாடலில் பாரதி, இந்தியத் தாயைத் துர்க்கையாக உருவகிக்கின்றான்; ஊழிக் கூத்தாடும் மாகாளியாக, வெறிகொண்டவளாக, பேயாக உருவகிக்கின்றான். கூறியது" என்னும் தலைப்பில் நீண்ட கவிதையொன்றைப் பாரதி பாடுகின்றான். "சத்ரபதி சிவாஜி தன் சைனியத்திற்குக் சீக்கிய குருவான கோவிந்த சிங்கின் வீரத்தைப் போற்றும் வகையில் "குரு கோவிந்த ஸிம்ஹ விஜயம்" என்னும் பாடலை யும் பாரதி புனைகின்றான். இவை அனைத்தும் அக்காலக் கட்டத்தில் எழுச்சியுற்ற தீவிர வாதத்தின் சாயலைப் பாரதி கவிதையிலும் காட்டுகின்றன. காலம் கவிஞனை உருவாக்குகிறது என்னும் உண்மையைப் பாரதியின் பாடல்கள் உணர்த்துகின்றன.

2.6. தீவிரவாதிகளின் இயக்கம் சமயச் சார்புடையதாக மலரத் தொடங்கியது என்பதனை இவை அனைத்தும் தெளிவாக்குகின்றன. அன்று தேசிய இயக் கத்தைத் தலைமை தாங்கி நடத்திய பெரியோர்கள் இந்து சமயச் சார்புடையயோராக

விளங்கினர் என்பது மறுக்கவியலா உண்மை. இதனால் விளையவிருக்கும் கேடு களைப் பாரதி உணர்ந்துள்ளான் என்று தெரிகின்றது. சத்ரபதி சிவாஜி பற்றிய பாடலை இயற்றிய பாரதி இந்தியா இதழில் எழுதியுள்ள கட்டுரைகளில் இதனைக் குறிக்கின்றான். சிவாஜி உற்சவம் குறித்து இந்துக்களுக்கும் மகமதியர்களுக்கும் ஏற்பட்டுள்ள மனக் கசப்பை விளக்கிவிட்டுப் பின்வரும் கருத்தை வலியுறுத்துகிறான்.

> "மகமதியர்கள் தங்கள் நாட்டைவிட்டு இதையே சுயநாடாக எப்பொழுது அடைந்தார்களோ அன்று முதல் அவர்களுக்கும் நமக்கும் ஒருவித சம்பந்தம் ஏற்பட்டுவிட்டது. நாமும் அவர்களின் பேரில் பூர்வீகக் குற்றங்களை எடுத் துரைத்தல் தப்பிதம்; அவர்களும், நம்மை உடன்பிறந்தவர்களெனப் பாவித்து நடக்கவேண்டும். நமக்குள்ளே எவ்வளவு சச்சரவுகள் நேர்ந்த போதிலும் நம்மை பிரித்து அரசாள எண்ணம் கொண்டுள்ள ஐரோப்பியரின் எண்ணத்தைக் குலைப்பதே நமது முதல் கடமை"
>
> (பாரதி தரிசனம், 1, ப. 282-283

இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கும் பாரதி ஒருவழி கூறுகின்றான்:

> *"இதை நாமெல்லோரும் நமது மகமதிய சகோதரர்களுக்குக் காரியத்தில் காட்ட அக்பர் போன்ற மகமதிய மகான்களின் உற்சவத்தைக் கொண்டாட வேண்டும் அதனால்தான் அவர்களுக்கு முழு நம்பிக்கையும் ஏற்படும். ஆகையால், நம் நாட்டாரனைவரும் இதை ஆழ்ந்து யோசித்து, நமது அக்பர் சக்கரவர்த்தியின் உற்சவத்தையும் கொண்டாடுவர் என்று நம்புகிறோம்.*
>
> (பாரதி தரிசனம், 1, பக். 283)

தீவினைவயத்தால் பாரதியின் நம்பிக்கை கைகூடவில்லை. சையது அகமதுகான் (1817-98) தோற்றுவித்த "அலிகார் இயக்கமும்" நவாப் அமீர் அலிகான் (1849-1928) நிறுவிய "தேசிய மகமதிய சங்கமும்" இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு எதிராகச் செயலாற்றின. ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கையே இறுதியில் வெற்றி பெற்றது.

3. பாரதியின் பாடல்களில் இந்திய தேசியமும் தமிழ்த் தேசியமும் ஒன்றற்க் கொன்று இசைந்து செல்லும் நெறிகளாக இடம்பெற்றுள்ளன. இவற்றுக்குள் முரண் பாடுகள் எதுவும் இல்லை. ஆனால், பாரதியின் காலத்திலேயே ஆரிய திராவிடப் பூசல்கள் மேலோங்கி வந்தன. இப்பூசல் குறித்துப் பாரதி கட்டுரைகளில் தன் கருத்து களைத் தெளிவுபடுத்துகிறான்.

3.1. பாரதி தேசபக்தப் பாடல்களில் பல இடங்களில் "ஆரிய" என்ற சொல் லைப் பயன்படுத்துகிறான். "வந்தே மாதரம்" என்னும் பாடலில் "ஆரிய பூமி" என்கிறான்; பாரத மாதாவினை "ஆரிய ராணி", "ஆரிய தேவி" என்கிறான். பாரத நாட்டுக் கொடியினைக் காத்துநிற்கும் வீரர்களின் அணியை "ஆரியக் காட்சி" என்கிறான், "ஆரிய என்ற சொல்லை அவன் ஓர் இனத்தைக் குறிக்கும் சொல் லாகப் பயன்படுத்தவில்லை. "பாரத ஜாதியம்" என்னும் கட்டுரையில் இமயம் முதல் குமரிவரையுள்ள மக்கள் அனைவர்க்கும் பொதுவான பண்பாட்டுச் செல்வங்களை அவன் "ஆர்ய ஸம்பத்து" எனக் குறிப்பதை முன்னரே கண்டோம். ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் பிரித்தாளும் கொள்கை மக்களுக்குள் இருந்த வேற்றுமைகளை

ஊக்கிவளர்ப்பதில் தீவிரம் காட்டியது. அவ்வப்போது கண் துடைப்புக்காக ஆங்கில அரசு அளித்த சலுகைகள் மக்களுக்குள் போட்டியையும் பூசலையும் வளர்த்தன. அதிகாரப் பங்கீடு என்று வரும்பொழுது தேசிய இயக்கத்தை முன்னடத்திச் சென்ற வர்களிடமும் தெளிவான தொலைநோக்குப் பார்வை இல்லாமல் போய்விட்டது, தீவினையே ஆகும்.

ஆரியம், திராவிடம் என்ற சொற்களுக்குப் புதிய பொருள் கற்பிப்பதைப் பாரதி ஏற்கவில்லை. அவனுடைய கருத்தில் தேசியத்திற்கு எதிரணியில் நிற்பவர்கள் "பொய்யும் புலையுமாகத் திராவிடர்களென்றும் ஆரியரென்றுமுள்ள பழைய சொற் களுக்குப் புதிய அபாண்டமான அர்த்தங்கள் கற்பித்துக்கொண்டு வீண் சண்டை" போடுபவர்களாகக் காட்சியளிக்கின்றனர். பிராமணர்-பிராமணரல்லாதார் இயக்கம் குறித்துப் பாரதி "ஜாதி பேத விநோதங்கள்" என்ற கட்டுரையில் எழுதுகின்றான். இக்கிளர்ச்சியில் உண்மையில்லை என்றும் காலப் போக்கில் அது தானே மங்கி அழிந்துவிடுமென்று கருதுவோரில் மிகச் சிலரே இக்கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளனர் என்றும் கூறி, இக்கிளர்ச்சி தன்னல நோக்கின் வெளிப்பாடே என்று முடிவு கூறுகிறான்.

> "பெரும்பாலும் சர்க்கார் அதிகாரங்களையும் ஜில்லா போர்டு தாலுகா போர்டு முனிசிபாலிட்டி சட்டசபை முதலியவற்றில் கௌரவ ஸ்தானங்களையும் அடைய வேண்டுமென்ற ஆவலுடையவர்களே இக்கிளர்ச்சியின் தலைவராக வேலை செய்து வருகிறார்கள்."
>
> (மகாகவி பாரதியார் கட்டுரைகள், ப. 403)

பிராமணரல்லாதார் என்று ஒரு ஜாதியே கிடையாது என்று வாதாடுகின்ற பாரதி சென்னை மாநிலத்தில் பிராமணர்-பிராமணரல்லாதார் பிரச்சினை வளர்ந்து வருவது குறித்துக் கவலை கொள்கிறான்.

> "இந்தியாவின் மற்றப் பகுதிகளைக் காட்டிலும் நமது சென்னை மாகாணத்தில் தான் ஜாதி பேதத்தைப் பற்றிய மனஸ்தாபங்கள் ராஜரீக விவகாரங்களிலுங்கூட புகுந்து தேச விடுதலையாகிய பரம தர்மத்துக்கே ஓர் இடுக்கண்ணாகக் கூடிய நிலைமை இம்மாகாணத்தில் மாத்திரமே காணப்படுவதினின்றும் நன்கு விளங்கும்."
>
> (மகாகவி பாரதியார் கட்டுரைகள், ப. 402)

பிராமணரல்லாதார் இயக்கத்தில் காணப்பட்ட அடிப்படையான முரண்பாட்டையும் அவன் சுட்டிக்காட்டத் தவறவில்லை. இந்தியாவைப் பொறுத்தவரை சாதி வேறு பாடுகள் மேலேயிருந்து அடிமட்டம் வரை ஊடுருவியுள்ளன. ஒவ்வொரு சாதியும் மற்ற சாதியோடு கொள்வினை கொடுப்பினை இல்லாமலும் ஒருவரோடொருவர் கலந்து உண்ணாமலும் தனித்து வாழும் நிலைமைதான் உண்மை. இத்தகைய அமைப்பில் பிராமணரும் ஒரு வகுப்புதானே; அவர்களை மட்டும் எவ்வாறு குற்றம் சாட்ட முடியும்? என்று பாரதி கேட்கிறான்:

> "நம்முடைய சைவ வேளாளருக்குள்ளே 'அல்லாதார்' கிளர்ச்சியைச் சேர்ந் திருப்பவருங் கூடத் தமக்கு மேற்படியிலுள்ள பிராமணர் பிரிவுக்குணமுடையோ ரென்றும் மற்ற வகுப்பினருடன் சேர்ந்துண்டு மணம் புரிந்து வாழ மறுக்கிறா

ரென்றும் நிந்திக்கிறார்களே யல்லாது, தமக்குக் கீழேயுள்ள இரண்டாயிரத்துச் சில்லரை சாதியார்களுடனும் தாம் சேர்ந்துண்டு மணம் புரிந்து வாழுமாறு யாதொரு பிரயத்தனமும் செய்யாதிருக்கிறார்கள்."

(மகாகவி பாரதியார் கட்டுரைகள், ப. 403)

சாதி வேறுபாடுகளையும் சமய வேறுபாடுகளையும் அரசியலில் பயன்படுத்துவோர் குறித்துப் பாரதி தமிழ் மக்களை எச்சரிக்கிறான். ஆங்கிலேய அமைச்சர் மாண்டேகு சென்னைக்கு வந்த நிகழ்ச்சியையொட்டிப் பாரதி பின் வருமாறு எழுதினான்:

"திராவிடக் கட்சியார் என்றும் இஸ்லாமியக் கட்சியார் என்றும் யாரோ சிலர் செய்யும் பொய்மேளக் கச்சேரியை நாம் இகழ்ந்து, நகைத்து, காங்கிரஸ் முஸ்லிம் சங்கங்களே தேசத்துக்குப் பொது என்பதை ஒரே வார்த்தையாக நிலைநிறுத்த வேண்டும். காங்கிரஸ் முஸ்லிம் சபைகளை எதிர்த்து நமக்கு சுயராஜ்யம் வேண்டாம் என்று சொல்லும் ஸ்வதேச விரோதிகளை அடக்கிவிட்டு, நாம் இப்போதே ஸ்வராஜ்யம் கேட்கும்படி நம் பிரதிநிதிகளாகிய காங்கிரஸ் முஸ்லீம் சபையோரை தூண்ட வேண்டும்"

(மகாகவி பாரதியார் கட்டுரைகள், ப. 86)

3.2. இனவுணர்வைத் தூண்டிவிட்டுக் கொண்டிருந்த பிராமணரல்லாதார் இயக்கத்தையும் சமய உணர்வைத் தூண்டிவிட்டுக்கொண்டிருந்த இஸ்லாமியக் கட்சிகளையும் கண்டித்து எழுதிய பாரதி ஒவ்வொரு மொழிக்கும் உரிய இடம் வழங்க வேண்டுமென்று வலியுறுத்தினான்; இந்தியத் தேசியத்தில் மாநிலமொழிகள் முழுமையாக வளர்ச்சிபெற வேண்டுமென்று வாதிட்டான். இன்றும் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்த முடியாமல் தடுமாறி கொண்டிருக்கின்ற பயிற்று மொழிக்கொள்கையில் பாரதி அன்றே தெளிவுடன் இருந்தான். எங்கும் எதிலும் தமிழ் என்று முழங்கினான். இந்தத் தமிழ் முழக்கம் தேசியத்திற்கு எதிரானதோ திராவிடத்திற்குச் சார்பானதோ அன்று என்றும் அவன் தெளிவுபடுத்தத் தவறவில்லை.

"தமிழ்நாட்டில் தேசீயக் கல்வியென்பதாக ஒன்று தொடங்கி அதில் தமிழ் பாஷையைப் ப்ரதானமாக நாட்டாமல் பெரும்பான்மைக் கல்வி இங்கிலீஷ் மூலமாகவும் தமிழ் ஒருவித உப பாஷையாகவும் ஏற்படுத்தினால், அது "தேசீயம்" என்ற பதத்தின் பொருளுக்கு முழுதும் விரோதமாக முடியுமென்பதில் ஐயமில்லை. தேச பாஷையே ப்ரதானம் என்பது தேசியக் கல்வியின் ஆதாரக் கொள்கை; இதை மறந்துவிடக் கூடாது. தேச பாஷையை விருத்தி செய்யும் நோக்கத்துடன் தொடங்கப்படுகிற இந்த முயற்சிக்கு நாம் தமிழ் நாட்டிலிருந்து பரிபூரண சகாயத்தை எதிர்பார்க்க வேண்டுமானால், இந்த முயற்சிக்கு தமிழ் பாஷையே முதற்கருவியாக அமைய வேண்டும். இங்ஙனம் தமிழ் ப்ரதானம் என்று நான் சொல்லுவதால் டாக்டர் நாயரைத் தலைமையாகக் கொண்ட திராவிடக் கட்சியார் என்ற போலிப் பெயர் புனைந்த தேச விரோதிகளுக்கு நான் சார்பாகி ஆர்ய பாஷா விரதம் பூண்டு பேசுகிறேன் என்று நினைத்துவிடலாகாது. தமிழ் நாட்டிலே தமிழ் சிறந்திடுக.........தமிழ் நாட்டில் தமிழ்மொழி தலைமை பெற்றுத் தழைத்திடுக."

(மகாகவி பாரதியார் கட்டுரைகள், பக். 351;352)

4. பாரதியின் தேச பக்திப் பாடல்களையும் அக்காலக் கட்டத்தில் அவன் எழுதிய கட்டுரைகளையும் ஒருங்குவைத்துக் கற்கும்பொழுது அவன் இந்தியத் தேசியத்திற்கும் தமிழ் தேசியத்திற்கும் ஆற்றியுள்ள, அரும்பெரும்பணி தெளிவாகப் புலப்படும். மொழிவழிக் கூட்டு வாழ்க்கையைப் பாரதி வரவேற்றான். விடுதலை பெற்ற இந்தியா ஒப்பிலாத நாடாகத் திகழும் என்றும் அது உலகுக்கு வழிகாட்டும் என்று அவன் நம்பினான். ''பாரத சமுதாயம்'' என்னும் பாடலில் அவனுடைய இவ்வுணர்வுகள் எதிரொலிக்கின்றன.

''முப்பது கோடி ஜனங்களின் ஸங்க
முழுமைக் கும்பொது உடைமை
ஒப்பி லாத ஸமுதாயம்
உலகத் துக்கொரு புதுமை''
''எல்லாரு மமர நிலை யெய்துநன் முறையை
இந்தியா உலகிற் களிக்கும்—ஆம்
இந்தியா உலகிற் களிக்கும்—ஆம் ஆம்
இந்தியா உலகிற் களிக்கும்''

(மகாகவி பாரதியார் கவிதைகள், மெர்க்குரி புத்தகக் கம்பெனி)

துணை நூற் பட்டியல்

இரவீந்திரன், ந., பாரதியின் மெய்ஞ்ஞானம், சென்னை புக்ஸ், சென்னை, 1986.

சாமிநாதையர், உ,வே, சிலப்பதிகாரம், சென்னை, 1986.

சுப்பிரமணிய பாரதி, சி., பாரதியார் கவிதைகள், மெர்க்குரி புத்தகக் கம்பெனி கோயமுத்தூர், 1971.

சுப்பிரமணிய பாரதி, சி., மகாகவி பாரதியார் கட்டுரைகள், வானதி பதிப்பகம், 1971.

சுப்பிரமணியம், எி.எஸ்., (பதிப்பாசிரியர்), பாரதி தரிசனம் 1, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 1986.

மணி, பெ.சு., இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், பூங்கொடி பதிப்பகம், சென்னை, 1978.

ரகுநாதன், பாரதி காலமும் கருத்தும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 1986.

ரகுநாதன், பாரதி சில பார்வைகள், மீனாட்சி புத்தக நிலையம் மதுரை, 1982.

நெடுநல்வாடைச் சிக்கலும் நாட்டுப்புறவியல் தீர்வும்

ச. முருகானந்தம்

தமிழ் மொழியில் அமைந்த மிகப் பழைய இலக்கியம் சங்க இலக்கியமாகும். சங்க இலக்கியம் என்பது எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் சேர்ந்த தொகுப்பு இதன் காலம் கி.மு. 6ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 2ஆம் நூற்றாண்டுவரை என்பர்[1]. நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகியவை எட்டுத்தொகையுள் அடங்கும். திருமுருகாற்றுப் படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப் பாலை, மலைபடுகடாம் ஆகியன பத்துப்பாட்டுள் அடங்கும். இவற்றுள் கலித் தொகை[2], பரிபாடல் ஆகியன சங்க இலக்கியத்துள் காலத்தால் பிற்பட்டன என்பர். மற்றவை கிருத்து பிறப்பதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முற்பட்டனவாகும்.

ஆதலின், மேற்சொன்ன பத்துப்பாட்டுள் நெடுநல்வாடையும் ஒன்று என்றும் இது சற்றேறக்குறைய ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்றும் அறிகிறோம். இதனை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடினார் என்பர். இவ் வாசிரியப் பாடலின் சில பதிப்புகளில் ஈற்றில் 'யாரை யார் பாடினார்' எனும் தகவல் குறிப்பு காணக் கிடக்கிறது[3]. இதன் வழி பாடினோர் மட்டுமல்லாது பாடப்பட்டோ ரையும் அறிகிறோம். பொதுவாக சங்க இலக்கியத்தில் நாம் காணலாகிற இதுபோன்ற குறிப்புகளும் திணைக் குறிப்பும் துறைக்குறிப்பும் தனிப்பாடல் வெண்பாக்களும் கடவுள் வாழ்த்தும் பதிகங்களும் வேறு சில தகவல் குறிப்புகளும் பிற்காலச் சேர்க்கை களே என்பர் அறிஞர். இவை காலத்தால் பிற்பட்டன என்பதும் இவை தரும் தகவல்கள் நம்பகத் தன்மை உடையன எனத் துணிந்து உறுதியாகக் கூறவியலாது என்பதும் ஆய்வறிஞர் பலரும் ஒப்பிய முடிவே.

ஆனாலும் இவை சிற்சிலச் சமயத்து வேறு ஆதாரங்கள் இல்லாதவழி ஓரளவுக்கு உதவுகின்றன என்பதும் உண்மையே. தொகுப்பித்தோரும் தொகுத்தோரும் ஆற்றிய அரும்பணியின் பயனைக் குறைத்து மதிப்பிட்டு விடுதலும் இயலாது. நூற்றுஎண்பத் தெட்டு அடிகளைக் கொண்ட இந்நெடுநல்வாடையின் இறுதியில், ஓரடியில்,

> "பாண்டியன் நெடுஞ்செழியனை மதுரைக் கணக்காயனார்
> மகனார் நக்கீரனார் பாடியது"

என்னும் தகவல் குறிப்பு காணப்படுகிறது. பத்துப்பாட்டுள் ஒரு பாட்டாகிய மதுரைக் காஞ்சி எனும் பாடலை மாங்குடி மருதனார் பாடினார் எனவும் இம் மதுரைக் காஞ்சி யின் பாட்டுடைத் தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் எனவும் அறிவோம். உரையாசிரியர் நச்சினார்க்கினியர் மதுரைக் காஞ்சியின் பாட்டுடைத் தலைவனே நெடுநல்வாடையின் பாட்டுடைத் தலைவனுமாவான் எனத் தமது உரையில் நிறுவ முயன்றுள்ளார். இவர்க்குப் பின் வந்த சான்றோர்

இது காரணம் பற்றியே புறப் பொருள் வெண் பாமாலையின் கண் அமைந்த 'வாடைப் பாசறை' எனும் துறைக்கு உதாரணமாகிய

"வாடை நலிய வடிக்கண்ணாள் தோள் நசைஇ"

எனத் தொடங்கும் வெண்பாவை இந்நெடுநல்வாடையின் இறுதியில் பெய்து வைத்தனர் என்பர்.

உச்சிமேல் புலவர்கொள் நச்சினார்க்கினியர் இத்துணிபுக்கு வர, நெடுநல்வாடையில் இடம் பெற்றுள்ள இரு வரிகளே காரணமாக அமைந்துள்ளன என்பர். இந்த இரு அடிகளைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு நச்சினார்க்கினியர் இந்த முடிவுக்கு வந்துள்ளார். பாசறையில் பாட்டுடைத் தலைவன்

"களிறு களம்படுத்த பெருஞ்செய் யாடவர்
ஒளிறுவாள் வழுப்புண் காணிய புறம்போந்து
....
....
முன்னோன் முறைமுறை காட்ட ...."

(நெடுநல். 171—777)

சென்று காணும் நள்ளென் யாமத்தில் உடன் செல்லும் சேனாபதி கையில் ஏந்திய வேலின் முனையில் வேம்புகட்டப்பட்டிருந்ததாக ஒரு குறிப்பு வருகிறது.

"வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம்"

(நெடுநல். 176)

என்பது அவ்வடி. இதற்கு,

"வேப்பந்தாரைத் தலையிலே கட்டின வலிய
காம்பினை உடைய வேல்"

என நச்சினார்க்கினியர் பொருள் கூறியிருக்கிறார். நெடுநல்வாடையின் ஈற்றடியாகிய,

"பலரொடு முரணிய பாசறைத் தொழிலே" (188)

எனும் அடிக்கு

"சேரன் செம்பியன் முதலிய எழுவரோடே
மாறுபட்டுப் பொருகின்ற பாசறை இடத்துப் போர்த்தொழில்"

என உரை கூறியுள்ளார். இவ்விரண்டு அடிகளையும் அகநானூறு 36, 175, 209ஆம் பாடல்களையும் புறநானூறு 19, 76ஆம் பாடல்களையும் சேர்த்து ஒரு சேர நோக்கித் தம் யூகத்துக்கும் உரைகூறும் முறைமைக்கும் ஏற்ப வருவித்துரைத்துப் பொருள் கூறி அமைதி கண்டார் நச்சினார்கினியர். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட மதுரைக் காஞ்சியுள்,

"இருபெரு வேந்தரொடு வேளிர் சாய" (55)

எனவரும் அடிக்கு

> "சேரன் சோழனாகிய இருவராகிய பெரிய
> அரசருடனே குறுநிலமன்னரும் இளைக்கும்படி"

என்று எழுதிய பின்னர்,

> "அரசுபட அமர்உழக்கி
> முரசுகொண்டு களம்வேட்ட
> அடுதிறல் உயர்புகழ் வேந்தே"

(மதுரைக். 128—130)

எனவரும் அடிகளுக்கு,

> "நெடுநிலமன்னர் இருவரும் குறுநில மன்னர் ஐவரும்
> படும்படிப் போரிலே வென்று......எழுவராவார்
> சேரன், செம்பியன், திதியன் எழினி, எருமையூரன்,
> இருங்கோவேண்மான், பொருநன் என்பர்.........
> இது தலையாலங்கானத்து வென்றமை கூறிற்று"

என்று கூறித் தம் வரலாற்றுப் புலமையைக் காட்டுகின்றார் என்பர்.

> "பாண்டியன் நெடுஞ்செழியன் தலையாலங்கானம் என்னும் இடத்தில் இருபெரு வேந்தரையும் ஐம்பெரு வேளிரையும் வென்ற செய்தியை அகநானூறும் (175, 209) புறநானூறும் (19) விளக்கமாகக் குறிப்பிடுகின்றன. ஆனால் மதுரைக் காஞ்சியோ நெடுநல்வாடையோ அம்மன்னன் போரிட்ட வரலாற்றினை விளக்க மாக கூறவில்லை. எனினும் அப்பாடல்களுக்கு உரை எழுதும் நச்சினார்க்கினியர் தேவையான இடங்களில் அம்மன்னனுடன் தொடர்புடைய வரலாற்றுச் செய்தி களைக் குறிப்பிட்டு விளக்குகிறார்"

என்பார் மு. வை. அரவிந்தன்.

'வேம்பு' எனும் சொல்லுக்கு 'வேப்பந்தார்' எனப் பொருள் கொண்டு, வேப்பந் தார் பாண்டியர்க்குரிய மாலையாதலால் இச்சொல் குறிப்பாகப் பாண்டிய மன்னன் ஒருவனைக் குறிக்கிறது எனக் கூறிய நச்சினார்க்கினியர், தாம் கொண்டு கூறிய குறிப்புப் பொருளைப் 'பலரொடு முரணிய' எனும் தொடரோடு இணைத்து, அப்பலர் எழுவர் எனவும், அவ்வெழுவர் சேரன் செம்பியன் முதலானோர் எனவும், ஆதலின் எழுவரைத் தலையாங்கானம் என்னும் இடத்தில் பொருது வென்ற நெடுஞ்செழியன் எனும் மன்னனே இவனாக இருத்தல் கூடும் எனவும் பொருள் கூறி முடித்தார்.

இங்ஙனம் வேம்பு எனும் சொல் சுட்டியதாகப் பொருள் கொண்டு, பின்னர் அக நானூறு, புறநானூறு, மதுரைக்காஞ்சி ஆகிய இலக்கியங்களின் துணைகொண்டு தமது யூகத்தை நிறுவ முயன்ற நச்சினார்க்கினியரின் உரைத்திறம் அவர்க்குப் பின் வந்த அறிஞர் பலராலும் இற்றைநாள் நூலாசிரியர்களாலும் மெச்சப்படுகிறது. குறிப் பால் உணர்ந்தும் யூகித்தும் கொண்டு கூட்டி வருவித்தும் தருவித்தும் சங்க இலக்கியத்தைப் பருந்தின் பார்வை போல ஒருசேர நோக்கியும் இறுதி முடிவுக்கு

வந்து, உறுதியாகத் தம் துணிபை எடுத்து வைத்த உரையாசிரியரின் உரைத்திறம் புகழ்ந்தேத்தப்படுகிறது.

> ''நச்சினார்க்கினியர் இலக்கணம், இலக்கியம் ஆகிய இரண்டுக்கும் உரை எழுதிய சான்றோர். தலைசிறந்த தமிழ் நூல்கள் பலவற்றுக்கு உரை கண்டு உரையாசிரியர்களுள் மிகச் சிறந்தவர் என்ற பெருமையுடன் மேலோங்கி நிற்பவர். பல நூறு ஆயிரம் பாடல்களை மனப்பாடமாகக் கொண்ட திறனும் பிறழாத நினைவாற்றலும் கலைச்சுவையுடன் அழகிய உரைநடை எழுதும் வன்மையும் கொண்டவர். உழைப்பின் திருவுருவாய், நுண்ணறிவின் இருப்பிடமாய், இலக்கிய ஆராய்ச்சியின் பிறப்பிடமாய் விளங்குபவர். இவர் பழம்பெரும் இலக்கண நூலாகிய தொல்காப்பியம், சங்க இலக்கியத்துள் பத்துப்பாட்டு, கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகை, குறுந்தொகையில் (பேராசிரியர் பொருள் எழுதாது ஒழிந்த) இருபது பாடல்கள், ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான சீவக சிந்தாமணி ஆகிய சிறந்த நூல்களுக்கு உரை கண்டவர்''[4] (பிறை அடைப்புக்குள் எழுதப்பட்ட தொடர் இக்கட்டுரையாசிரியரால் எழுதப்பட்டது)

என மு.வை. அரவிந்தன், நச்சினார்க்கினியரின் பணியையும் உரையின் பான்மையையும் குறிம்பிடுகிறார். இவர் இளம்பூரணர் (11ஆம் நூற்.), பேராசிரியர் (12ஆம் நூற்.), அடியார்க்கு நல்லார் (12ஆம் நூற்.), பரிமேலழகர் (13ஆம் நூற்.) ஆகிய உரையாசிரியர்களுக்குப் பிற்பட்டவராவார். இவர் காலம் கி.பி. 14ஆம் நூற்றாண்டு என்பர்.

> ''இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், ஆளவந்தபிள்ளையாசிரியர் முதலிய உரையாசிரியர்கள் இவருடைய உரையில் எடுத்துக் கூறப்பட்டிருத்தலின் அவர்களுக்கும், திருமுருகாற்றுப்படையுரையில் பரிமேலழகர் கொள்கையை மறுத்திருத்தலின் அவருக்கும் இவர் பிற்காலத்தவர் என்பது உறுதிப்படவே, கி.பி. 14ஆம் நூற்றாண்டே இவர் வாழ்ந்த காலம் என உறுதிப்படுகிறது. இவர் அகத்தியம் முதலாக விளக்கத்தார் கூத்து ஈறாக என்பதுக்கும் மேற்பட்ட தமிழ் நூல்களிலும் வேதம் முதலான வட நூல்களிலும் பெரும்புலமை யுடையவர்''[5]

என்பார் உ.வே. சாமிநாதய்யர் இத்தகைய திறம்படைத்த நச்சினார்க்கினியர் கூறும் உரை எளிதில் புறந்தள்ளத்தக்கதன்று.

நெடுநல்வாடையை எழுதிய மதுரைக் கணக்காயர் மகனார் நக்கீரனார் யாது கருதி இந்நெடும் பாட்டை எழுதினார் என அறிய முடியவில்லை. இவர் திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை, அகநானூற்றில் சில செய்யுள்கள், கைலைபாதி காளத்திபாதி அந்தாதி, இறையனார் அகப்பொருள் உரை, திருஈங்கோய்மலை எழுபது, திருவலஞ்சுழி மும்மணிக் கோவை, திருவெழு கூற்றிருக்கை, பெருந்தேவ பாணி, கோபப்பிரசாதம், காரெட்டு, போற்றிக்கலி வெண்பா, திருக்கண்ணப்பதேவர் திருமறம், நாலடி நாற்பது ஆகியன இயற்றினார் என்பர். இக்கூற்று நம்புந் தரத்தினது அன்று. இவற்றுள் பல, நக்கீரர் எனும் பெயரில் பிற்காலத்தில் வாழ்ந்தவர்கள் எழுதியன. நெடுநல்வாடையை எழுதிய நக்கீரரே அகநானூற்றில் சில செய்யுள்களையும் திருமுருகாற்றுப் படையையும் எழுதியிருக்கக்கூடும். மற்றவை இவரால் எழுதப்பட்டனவாக இருத்தல் இயலாது.

'மதுரை நக்கீரர்' எனும் பெயருடையார் பாடியதாகக் காணப்படும் அகநானூற்றுப் பாடலில்,

"கொய்சுவல் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
ஆலங்கானத்து அகன்தலை சிவப்ப........" (36)

எனவரும் அடிகளால் செழியனது தலையாலங்கானத்துப் போர் குறிப்பிடப்படுகிறது. இதே அகநானூற்றுத் தொகுதிகள், ஆலம்பேரிச் சாத்தனாரை ஆசிரியராகக் கொண்ட ஒரு பாடலில்,

"கால்இயல் நெடுந்தேர்க் கைவண் செழியன்
ஆலங்கானத்து அமர்கடந்து உயர்த்த வேல்" (175)

என வரும் அடிகளாலும் மேற்சொன்ன செய்தி காணுமாறு உள்ளது. கல்லாடனாரின் அகநானூற்றுப் பாடலில்,

"எழு உறழ் திணிதோள் இயல்தேர்ச் செழியன்
நேரா எழுவர் அடிப்படக் கடந்த
ஆலங்கானத்து ஆர்ப்பினும் பெரிது..." (209)

என வரும் அடிகளாலும் இச்செய்தி உறுதிப்படும். இவை போக, குடபுலவியனார் பாடிய புறநானூற்றுப் பாடலில்,

"......... .... தலையாலங் கானத்து
மன்னுயிர்ப் பன்மையும் கூற்றத்து ஒருமையும்
நின்னொடு தூக்கிய வெல்வேற் செழிய" (19)

எனவரும் அடிகளும், இடைக்குன்றூர் கிழார் பாடிய புறநானூற்றுப் பாடலில்,

"புனைகழல் எழுவர் நல்வலம் அடங்க
ஒருதானாகிப் பொருது ...." (76)

எனவரும் அடிகளும் இச்செய்தியையே உறுதிப்படுத்துகின்றன. இவற்றுள் மதுரை நக்கீரரும் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனாரும் ஒருவரே எனக் கொள்ளுதல் சாலுமா என நினையலாம். இவர் வேறு, அவர் வேறு எனக் கொண்டால், நெடுநல்வாடையின் பாட்டுடைத் தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்பதற்கு வேறு புறச்சான்றுகள், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனரால் கூறப்படுமாறில்லை.

செவ்வியல் இலக்கியக் கொள்கையை உறுதியாகக் கடைபிடித்த சங்கச் சான்றோர்களில் ஒருவரும் புலமைத் திறன் மிக்கவருமான நக்கீரர்,

"மக்கள் நுதலிய அகன்ஐந் திணையும்
சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர்"

(தொல். அகத். 54)

எனும் தொல்காப்பிய விதி பிறழ்ந்து, வேம்பு எனும் சொல்லால் வேப்பந்தாரைக் குறித்து இது பாண்டிய மன்னர்க்கு அடையாளமாதலின் அதனைக் குறிப்பால் உணர்த்தி, இதன் வழியாகப் பாட்டுடைத் தலைவனைப் பாண்டிய மன்னன் எனக் குடிப்பெயர் வெளிப்படுத்தி 'பலரொடு முரணிய பாசறைத் தொழிலால்; இவனே தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என ஐயத்திற்கு இடமின்றி இயற்பெயரை யூகித்துக் கொள்ள இடமளித்து அகத்திணை இலக்கிய மரபுக்கு விரோதமாக நூல் யாத்திருப்பார் எனக் கொள்வது சிரமமாக உள்ளது முன்னரே சொன்னபடி, நெடுநல்வாடை, கைக்கிளை, பெருந்திணைப் பாடல்கள் மலிந்த கலித்தொகையைப் போலச் சங்க காலத்தின் கடைசிப்பகுதி நூலன்று. சங்க காலத்தின் முதற்பகுதியைச் சேர்ந்ததாகலின் அக்கால கட்டத்தைச் சேர்ந்த, மரபு களைக் கடுமையாகப் பின்பற்றிப் பாடியோரிடையில் தோன்றிய நக்கீரர், மரபு மீறிப் பாடினார் எனக் கொள்ளுதல் அக்கால இலக்கியக் கொள்கைக்கு முரணாகப் படுகிறது. ஆகவே, நெடுநல்வாடையின் சில பதிப்புகளில் காணலாகிற பாடினோர் பாடப்பட்டோர் தகவல் குறிப்பை நம்பகத்தன்மை உடையதன்று எனப் புறந்தள்ளி விட்டால், நச்சினார்கினியரே இப் பாட்டுடைத் தலைவனை முதலில் நிறுவியவர் ஆகிறார்.

அவ்வாறாயின், உரையாசிரியர் நச்சினார்க்கினியரின் கருத்தே மூலநூலாசிரியர் நக்கீரரின் கருத்தா என்னும் பொருள் பொதிந்த கேள்வியை எழுப்புதல் இன்றியமை யாததே. இவ்விடத்தே அறிஞர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனாரின் கருத்தொன்று இணைத்துப் பார்க்கத்தக்கதாக உள்ளது.

> ''பொதுவாக உரையாசிரியர்கள் காலமாற்றங்களுக்கு இயையப் புது விதிகளும் விளக்கங்களும் கூறும் பொழுது அவற்றைத் தமது கருத்தாகக் கூறாது இவையே மூல நூலாசிரியர் கருத்து என்று கூறிக் கொள்வர். இந்திய உரை யாசிரியர் பலருக்கும் இப்பண்பு பொதுவானது''[6]

என்பார் தெ.பொ.மீ. இலக்கிய உரைகளில் மட்டுமன்று, சமய சாத்திர உலகிலும் இப்போக்கைக் காணலாம். வியாச முனிவர் எழுதிய பிரம சூத்திரத்திற்கு அத்வை தத்தை நிறுவிய சங்கரரும் த்வைதத்தை நிறுவிய மத்துவரும் விசிஷ்டாத்வைதத்தை நிறுவிய ராமாநுஜரும் முரண்பட்ட வகையில் தத்தம் மதங்களுக்கு ஏற்ற வகையில் பாடியங்கள் எழுதி இதுவே வியாசமுனிவரின் கருத்து என நிறுவ முற்பட்டனர் இதுபற்றி ராதாகிருஷ்ணன்,

> ''பிற்காலத்திலே எழுந்த மெய்யியல் பிரிவுகளைச் சார்ந்தோர் தமது கோட்பாடு களுக்கும் உபநிஷதங்களுக்கும் உடம்பாடு காண்பிப்பதில் காட்டும் ஆவல் இரங்கத்தக்கதாயுள்ளது. தமது கூற்றுக்களை உபநிஷதங்களின் மேல் சுமத்த முடியாதவிடத்தும் அவ்வாறு செய்யவே படாதபாடு படுவர்''[7]

என்பார். இந்திய நாட்டில் உள்ள வியாக்யானகர்த்தாக்களுக்கு உள்ள இப்பொது வான குணாம்சம் நச்சினார்க்கினியரிடத்தும் உண்டு.

நச்சினார்க்கினியர் 'வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகத்' திற்கும் 'பலரொடு முரணிய பாசறைத் தொழிலுக்கும் கொண்ட பொருள் நச்சினார்க்கினியரின் கருத்தா அல்லது நூலாசிரியர் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனாரின் கருத்தா எனும்

கேள்விக்கு நச்சினார்க்கினியரின் கருத்து எனப் பதில் கூறுதலே சிறந்ததாகும். தம் கருத்தை நூலாசிரியர் கருத்தாக ஏற்றிக்கூறி வியாக்யானம் செய்யும் இப்பொதுமைக் குணம் இந்திய உரையாசிரியருள் ஒருவராகிய நச்சினார்க்கினியருக்கு இருந்ததில் வியப்பேதும் இல்லை. சொற்களையும் தொடர்களையும் முன் பின்னாக முறை மாற்றியும் மேல் கீழாக கீழ்மேலாக ஆக்கியும் முன் பின்னாக வரும் சொற்களை ஒடித்தும் முதலடியை ஈற்றடியோடு இயைத்தும் ஈற்றடியை இடையடியோடு சேர்த்தும் தாம் கொண்ட பொருளுக்கு ஏற்ப நூலாசிரியரின் செய்யுளை வளைத்து உரை செய்யுங் கலையில் மிகத் தேர்ந்தவரான நச்சினார்க்கினியருக்கு அகநானூறு, புறநானூறு, மதுரைக்காஞ்சி ஆகிய செய்யுட்பகுதிகளைச் சேர்த்துப் பார்த்து நெடு நல்வாடையின் அந்த அகத்தன்மைக்கு மாறாகப் பொருள் கூறுவதில் சிரமம் ஒன்றும் இல்லை. நாகப்பட்டினத்துச் சோழனுக்கு நாககன்னிகையிடத்தே பிறந்த தொண்டைமான் இளந்திரையனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பெரும்பாணாற்றுப் படைக்கு (வரிகள் 58—59) உரையெழுதிய நச்சினார்க்கினியர் 'கொம்பிடத்தே பூங்கொத்தையுடைய வேம்பினுடைய மேன்மையுடைய இலையைப் பிள்ளைக்குக் காவலாகக் கொண்டிருக் கின்ற மகடூஉ' என எழுதியுள்ளார். வண்டியோட்டிச் செல்லும் உமணப் பெண் தன் பிள்ளைக்குக் காவலாகக் கடிப்பகையான வேம்பின் இலையைப் பயன் கொண் டமை ஈண்டு உரையாசிரியரால் சரியாகவே குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் நெடுநல் வாடைக்கு உரையெழுதிய விடத்தே இவர் வேம்பை, வேம்பின் இலையெனக் கொள்ளாமல் வேம்பின்பூ எனக் கொண்டு அப்பூவைப் பாண்டியனது அடையாள மாலையாக்கி, பாட்டுடைத் தலைவனைப் பாண்டிய அரசன் எனக் கொண்டு உரை எழுதி இப்பாட்டு அகப்பாட்டா. அகப்புறப்பாட்டா, புறப்பாட்டா எனும் ஐயத்திற்கு இடமாக்கினார். இது ஒரு வலிந்த முயற்சி பொதுவாகவே நச்சினார்க்கினியரிடம் வலிந்து பொருள் கூறும் போக்கு சில இடங்களில் உண்டு. மேற்காட்டியபடி வேம்பின் பயனை பெரும்பாணாற்றுப்படைக்கு ஒரு விதமாகவும் நெடுநல்வாடைக்கு வேறு விதமாகவும் கூறியமையால் உள்ள முரண்பாடு கவனிக்கத்தக்கது. தம் உரைத்திறத்தால் ஏற்பட்டபின் விளைவுகளையும் அவர் அறியாதவர் அல்லர். நெடு நல்வாடைக்கு முன்னுரை எழுதப் புகுந்த நச்சினார்க்கினியர்,

> "இப்பாட்டு, சுட்டி ஒருவர்ப் பெயர்கொள்ளாமையின் அகப்பொருளாமேனும் வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம் என அடையாளப் பூக் கூறினமையின் அகமாகாதாயிற்று"

என எழுதி நெடுநல்வாடை அகப்பாட்டு ஆகாமையைச் சுட்டிக்காட்டிச் செல்கிறார். குடிப்பெயரோ அல்லாது இயற்பெயரோ 'பெயர் சுட்டப்படின் அது அக இலக்கிய மாகாமல் வாழ்க்கை வரலாறாக அமைந்து விடும்' என்பது அகஇலக்கியக் கொள்கை[3]. வெளிப்படையாக அல்ல, குறிப்பாகச் சுட்டினாலும் கூட சுத்தத் தன்மைக்கு மாசுமரு உண்டாகிவிடும். தற்கால உரையாசிரியர் பொ.வே சோமசுந்தர னார் எழுதிய உரையில்,

> "இந்நெடுநல்வாடை இவர் காலத்தே சிறப்புற்று விளங்கிய புரவலனாகிய தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுடைய வெற்றியைக் குறிப்பாகப் புகழ்ந்ததாம். அகப்பொருள் நெறிநின்று இனிதுறப் பாடி வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம்' எனும் ஒரே அடியினால் இந்நெடு

நல்வாடையைக் குறிப்பாகச் செழியனுக்கு உரிமையாக்கிச் சுட்டின நுணுக்கம் உணர்ந்து இன்புறற்பாலது''[9]

என எழுதுவார். செழியன் வெற்றியைக் குறிப்பாகப் புகழ்ந்து இப்பாடலை அவனுக்குக் குறிப்பாக உரிமையாக்கிச் சுட்டின நுணுக்கம் உணர்ந்து இன்புறுதல் யாங்ஙனம்? 'அகப் பொருள் நெறி' நின்ற விதம் எப்படி? நக்கீரர் அகப்பொருள் நெறி நின்று இனிதுறப் பாடினார் என்பது சரிஎனக் கொண்டால், செழியனைக் குறிப்பாகப் புகழ்ந்து,குறிப்பாகச் சுட்டினார் என உரைகூறிய நச்சினார்க்கினியர் உரை சரியன்று எனல் பொருத்தமுடையதே யாகும். அக இலக்கியக் கொள்கைக்கு விரோதமாக நச்சினார்க்கினியரின் உரை அமைந்து விடுகிற போது'இன்புறாமல்' வேறு பொருத்த மான உரை கூறலே சரியானதாக இருக்கக்கூடும்.

வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம் என அடையாளப்பூக் கூறினமையான் அகமாகாதாயிற்று என உரையின் பயனாய் ஏற்பட்ட விளைபயன் சுட்டி, அப் பாட்டின் மாசுமருவற்ற தன்மையை, சுத்த அகவிலக்கியம் எனும் கருத்தை ஐயத் துக்கு இடமாக்குவார்.

''கைக்கிளை முதலா பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப'' (தொல். 947)

எனும் ஏழு திணைகளுள் கைக்கிளை என்பது ஒருதலைக் காதல் என்பதாலும் பெருந்திணை என்பது பொருந்தாக் காதல் என்பதாலும் அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்திணைகளைப் போலச் சிறப்புடையன அல்ல எனும் கருத்து உண்டு. ஆகவே இவற்றை 'அகப்புறத்திணை' என்று அகராதிகள் குறிப்பிடுகின்றன. 'அகனாகிய ஐந்திணைக்கும் புறனாகிய ஒழுக்கம். அது கைக் கிளையும் பெருந்திணையும் என இருவகைப்படும் எனத் தமிழ்மொழி அகராதி விளக்கம் தருகிறது. இதுபோலவே அகப்புறக் கைக்கிளை, அகப்புறப் பெருந்திணை என்பன முறையே காமஞ் சாலா இளமையோள் வயின் குறுகி யொருவன் அவள் குறிப்பறியாது மேன் மேலும் கூறுவதும், பொருந்தாக்காம வயப்படுவதுமாகும் என்பர். இவ்வாறே மடலேறுதல் முதலாகத் தபுதார நிலையீறாகச் சொல்லப்பட்ட, இயற்பெயர் கொள்ளாத பாடல்களை 'அகப்புறப்பாடல்கள்' எனக் கூறுவர்.

இலக்கிய உலகில் மட்டுமல்ல, சமய உலகிலும் மாற்றுக் குறைந்த, முதல் மூல வழியிலிருந்து விலகிப் பிரிந்த சமயப்பிரிவுகளை 'அகப்புறச் சமயங்கள்' எனக் குறிப் பிடுவது உண்டு. சைவத்தின் ஆறு புறப் பிரிவுகளான பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், அயிக்கியவாதம் ஆகியனவற்றைச் சமய நூலோர் 'அகப்புறச் சமயங்கள்' எனப் பெயரிட்டு அழைப்பதைக் காணலாம்.

மடலேறுதல் முதலாகத் தபுதார நிலை யீறாகச் சொல்லப்பட்ட பாடல்கள் இயற் பெயர் சுட்டாது போயினும் அவை அகப்புறப் பாடல்கள் என வழங்கப்படல் வழக் காறாயின் குடிப்பெயராகிய பொதுப் பெயரை அடையாளப்பூக் கூறி குறிப்பால் உணர்த்தியும், இயற்பெயரை யூகித்துக்கொள்ள இடமளிக்கும் சரித்திரப் பிரசித்தி பெற்ற போர்த்தொழிலைக் குறிப்பிட்டும் பாடப்பட்ட நெடுநல்வாடையும் அகப்புறப் பாட்டு எனவே பொருந்தும் அல்லவா? தம் உரைத்திறத்தால் உண்டான விளை

பயன் அறிந்த நச்சினார்க்கினியர் இக்காரணம் பற்றியே 'இது அகமாகாதாயிற்று என அமைதி கண்டார்.

மூல நூலாசிரியரான மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்க்கும் உரையாசிரியர் மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர்க்கும் இடைப்பட்ட காலம் சற்றேறக்குறைய பதினான்கு நூற்றாண்டுகளுக்கு மேலாகும். நச்சினார்க்கினியர்க்கும் தற்காலத்துக்கும் இடையில் ஆறு நூற்றாண்டுகள் உள்ளன. முன்னோர் மொழி பொருளைப் பொன்னே போல் போற்றும் மரபு மீறாத, வழக்கம் மாறாத பொதுக்குணத்தால் இன்றுவரை நெடுநல்வாடை பரிசுத்தமான அகப்பாடல் அன்று என்றும் அது அகபுறப்பாட்டு என்றும் அது பற்றிய ஓர் இலக்கிய கொள்கை உறுதியுடன் நிலைபேறு பெற்றுவிட்டது. இவ்வளவு காலமாக நிலவிவரும் இச் சிந்தனை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதுதானா, மறுபரிசீலனைக்கு இடமளிக்காதது தானா எனும் கேள்விகள் எழுப்புவது ஆய்வுநெறி தழைக்கவும் புதுப்பொருள் கிளைக்கவும் வழிகோலுவதாகும். இக்கேள்விகளின் உறுபயனாக நெடுநல்வாடைச் சிக்கலுக்குச் சமூக வரலாற்றியல், நாட்டுப்புறவியல் ஆகிய துறைகள் தீர்வு தருகின்றன. இவற்றுள்ளும் சிறப்பாக நாட்டுப்புறவியல் அடிப்படையால் இச்சிக்கலை ஆயும்பொழுது இவ்வாய்வின் பால் புதுவெளிச்சம் படர்கிறது.

'பலரொடு முரணிய பாசறைத்தொழில்' எனும் தொடர் குறித்துச் சில கருத்துகளைக் கூறலாம். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுடைய உள்ளத்தில் மாங்குடி மருதனார் பெற்றிருந்த இடத்தைப்போல ஓர் உயர்ந்த இடத்தை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பெற்றிருந்ததாகக் கூற வியலாது. வஞ்சின காஞ்சித் துறையின் பாற்பட்ட புறநானூற்றுப் பாடலில் நெடுஞ்செழியன் வஞ்சினம் கூறும்பேது,

''சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு
ஒருங்கு அகப்படேஎன் ஆயின் ....
....
மாங்குடி மருதன் தலைவன் ஆக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை'' (72)

என வஞ்சினம் உரைப்பதால், மாங்குடி மருதன் முதலாகப் பெரும்புலவர் பலரும் தன்னைப் பாடவேண்டும், தன்னாட்டில் எப்போதும் இருந்து உறைதல் வேண்டும் என அவன் உள்ளம் விரும்பிய வேட்கை புலனாகிறது. இதன்வழி அவன் மனதில் மாங்குடி மருதனார் பெற்றிருந்த இடமும் தெரியவருகிறது. இத்துணைக் கேண்மையும் நட்பாங்கிழமையும் கொண்ட மாங்குடி மருதனாரே இம்மன்னனைப் பாட்டுடைத் தலைவன் ஆக்கிப் பாடிய மதுரைக் காஞ்சி எனும் புறப்பொருள் நூலில் இவனது தலையாலங்கானப் போரைப்பற்றிய விரிவான செய்திகளைக் கூறாது விடுத்தபோது, நக்கீரர், அதுவும் அகப் பொருள் நெறிநின்று நூலாக்க முனைந்தவர் குடிப்பெயரையும் இயற்பெயரையும் யூகித்தறிய மறைமுகமாகக் குறிப்புகள் தந்து நூல்யாத்து மரபு மீறியிருப்பார் என நம்புவது கடினமாக உள்ளது. மறைமுகக் குறிப்புகள் தந்து, யூகித்தறிய கோடி காட்டியேனும் தமது அக நூலில் இம்மன்னனது போரைப்பற்றிச் சுட்டிச் செல்ல வேண்டும் எனக் கருதுமளவுக்கு இவ்விருவர்க்கும் கோப்பெருஞ்சோழன் — பிசிராந்

தையார், பாரி—கபிலர், அதியமான்—ஔவையார் போல ஆழமான நட்பு இருந்ததாகக் கூறுவதற்குச் சான்றுகள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே 'பலரொடு முரணிய பாசறைத் தொழிலுக்கு' நச்சினார்க்கினியர் தொடக்கம் பொ.வே. சோமசுந்தரனார் வரை கூறிவரும் விளக்கம் பொருத்தமானதாக இல்லை என்றே தோன்றுகிறது.

சங்ககாலம் வீரயுகக்காலம் என, அக்காலச்சான்றோர் பாடல்களை ஆராய்ந்த கலாநிதி கனகசபாபதி கைலாசபதி கருதுகிறார். சங்க காலத்தில் நிலையான அரசு இல்லை. வேளிரும் குலமரபுக் குழுக்களின் தலைவர்களும் 'போகம் வேண்டிப் பொதுச் சொற் பொறாது, இடம் சிறிதென்றும் ஊக்கம் துரப்ப' அக்கம்பக்கம் உள்ள பிறதலைவர், வேளிர், குலமரபுக் குழுத்தலைவர் ஆகியோருடன் சதாசர்வகாலமும் போர் பற்றி எல்லைக்கு அப்பாலும் பாத்தியதை கொண்டாடி முரண்படு போர்த் தொழில் புரிவதையே தொழிலாகக் கொண்டிருந்தனர். இதன் காரணமாகவே, புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய நூல்களில் இத்துணைப் போர்களைக் காண முடிகிறது பிற தலைவர்களின் நிலப்பகுதிகளை கைப்பற்றிக் கொண்டு எல்லையை விரிவுபடுத்தி ஓர் அரசை நிறுவி விடவேண்டும் என்பதே ஒவ்வொருவரின் தாபமுமாய் இருந்திருக்கிறது. ஆகவே ஒவ்வொரு தலைவரும் மற்ற தலைவர்களுக்குக் கருத்தளவில்'பகைவராகவேயிருந்திருக்கின்றனர். இது காரணம் பற்றியே சான்றோர் இலக்கியத்தில் காணலாகிற பகைவரைக் குறிக்கும் சொற்கள் எல்லாம் படர்க்கைப் பன்மைச் சொற்களாகக் காணப்படுகின்றன. புறநானூற்றில் அடங்காதோர் (35) ஆற்றார் (93), இகழுநர் (21), உடலுநர் (17), உறுவர் (11), ஒன்னாதோர் (94) ஒன்னார் (6), கொள்ளார் (158), செறுவர் (100), தெவ்வர் (87), நண்ணார் (23) பிறர்—பகைவர் என்னும் பொருளில் (7, 12, 40), போற்றார் (2), மலைக்குநர் (61) வட்கார் (100), ஆகிய சொற்கள் பகைவரைக் குறிப்பன: பதிற்றுப்பத்தில் ஒன்னார் (10), நண்ணார் (20), பகைவர் (15, 17) படியோர் (20, 79), முரணியோர் (20) ஆகிய சொற்கள் பகைவரைக் குறிப்பன. பொருநராற்றுப் படையில் தெவ்வர் (வரிகள் : 120, 133), சிறுபாணாற்றுப்படையில் அஞ்சினர்—வினையாலணையும் பெயராக, அஞ்சினவர் எனும் பொருளில் (வரி : 210), பெரும்பாணாற்றுப்படையில் தெவ்வர் (வரிகள் : 118, 419, 491), மதுரைக்காஞ்சியில் ஒன்னார் (வரி 726) செறுநர் (152), செற்றவர் (132), தெவ்வர் (189), பகைவர் (201), பட்டினப்பாலையில் செற்றோர் (228), தெவ்வர் (299), நண்ணார் (225), மலைபடுகடாம் எனும் கூத்தராற்றுப் படையில் ஒன்னாத் தெவ்வர் (386), தெவ்வர் (86, 386, 397, 488) என வரும் சொற்கள் அனைத்தும் பகைவரைக் குறிக்கும் சொற்களாகும். இவை அனைத்தும் படர்க்கைப் பன்மைச் சொற்களே. ஆகவே, இச்சொற்கள் அனைத்தும் அக்காலப் பாசறைத் தொழிலே பலரொடு முரணுவதுதான் என்பதைத் தெரிவிக்கின்றன. இதற்குச் சார்பாய் இவ்விடத்தே கைலாசபதியின் கருத்தொன்றை இயைத்துப் பார்க்கலாம்.

"வீரயுகத்தின் முற்பகுதியிலும் அதற்கு முன்னரும் தமிழ்ச் சமுதாயம் குலமரபுக் குழுக்களின் அடிப்படையில் அமைந்தது. இக்குழுக்கள் கூட்டுவாழ்க்கையில் ஈடுபட்டிருந்தன. குழுவிற்குள் வயது, அனுபவம் முதலியவற்றாலே தலைமை பெற்றோர்—முதியவர் இருப்பினும் பொதுவாகச் சமத்துவமும் ஒற்றுமையும்

நிலவின. இத்தகைய குலங்கள், குடிகள் முட்டி மோதிக் கலந்ததன் விளைவாகவும், போரில் அழிக்கப்பட்டதன் விளைவாகவுமே அரசுகள் தோன்றின."[10]

எனும் ஆய்வுக் கருத்து அக்கால கட்டத்தின் மிக முக்கியமான 'பலரொடு முரணும் பாசறைத் தொழி'லின் தேவையைத் தெள்ளத் தெளிவாக விளக்குகிறது. சமூக வரலாற்றியல் அக்காலகட்டத்தின் குணாம்சங்களை வெட்டவெளிச்சமாக்குகிறது இதனால் 'பலர்' எனும் சொல்லுக்கு எழுவர் எனப் பொருள் காணும் தொடக்கம் முதலாக அவர் எவர் எனப் பட்டியல் இடுதல் ஈறாகக் குறிப்பால் உணர்தலும் யூகித்து அறிதலும் அவசியம் இல்லாது போகின்றன.

அக்காலத்தில்அரசு'எனும் நிறுவனத்தை நிறுவுவதற்குக் குலமரபுக் குழுக்களின் தலைவர்கள் இடைவிடாது எப்போதும் போர் செய்து கொண்டிருக்க வேண்டிய தேவை இருந்தது. இதன் பொருட்டாகப் புலவர்கள், போர் வீரர்களுக்கு 'உயர்ந்தோர் உலகம்', 'மேலோர் உலகம்,, 'அரும்பெறல் உலகம்', 'தொய்யா உலகம்', 'வாரா உலகம்', 'பெரும் பெயர் உலகம்', 'தேவர் உலகம்' எனும் வீர சுவர்க்கத்தில், இன்பம் அளிக்கக் காத்துக்கொண்டிருக்கும் 'மாசின் மகளிரை' அடைய வீரமரணம் உறும்படி ஒரு கருத்து நிலையை உருவாக்கினர். விழுப்புண்பட்டு வீரமரணம் பெறுவோர் பெறுகிற புகழானது மறப்புகழ், பலர்புகழ், மறம் வீங்கு புகழ், ஓங்கு புகழ், பெரும்புகழ், வீயா விழுப்புகழ், வண்புகழ், விறற்புகழ், விளங்கிய புகழ், மாயாப்பல் புகழ், வான்புகழ், விண்பொரு புகழ், உரைசல் புகழ் சேண்விளங்கு புகழ்,வயங்குபுகழ் பல்புகழ்,கேடில் விழுப்புகழ், மலிபுகழ் என விதந்துரைக்கப்பட்டது. அரசின் பொருட்டும் அரசுத்தலைவனின் பொருட்டும் தமது உயிரைத் தியாகம் செய்து விடுமளவுக்கு வீரர்களைத் தயாரிக்க முயன்ற முயற்சிகளையும் இப்பணிக்காகப் புலவர்கள் பெற்ற ஊதியத்தையும் சான்றோர் பாடல்கள் விளக்குகின்றன. பலரொடு முரணிய பாசறைத் தொழிலின் பின்புலமும் விளைபயனும் இவை.

இனி, நெடுநல்வாடையின் சிக்கலுக்கே முதற்காரணமும் முழுகாரணமுமாகிய 'வேம்பு' எனும் சொல் உணர்த்தும் செய்தி யாது என ஆய்வோம். சங்க இலக்கியத் தொகுதியுள் இச்சொல் குறிக்கப்படும் விதம் குறித்து அறிதல் அவசியமாகும்.

கருஞ்சினை விறல் வேம்பு	—	பதிற். 49
சினை அவர் வேம்பு	—	கலி. 92
நெடுஞ்சினைப் பொரி அரை வேம்பு	—	நற். 3
புன்கால் சிறியிலை வேம்பு	—	நற். 103
பாரிய பராரை வேம்பின் படுசினை	—	நற். 218
வேம்பு சினை ஒடிப்பவும்	—	புறம். 296
வேம்பின் ஒண்குழை	—	புறம். 79

வேம்பின் ஒண்தளிர்	—	புறம். 77
வேம்பின் மாச்சினை ஒண்தளிர்	—	புறம். 76
கருஞ்சினை வேம்பின் அரவாய் அங்குழை தெரியல்	—	பொரு. 144
வேம்பின் ஒண்பூ	—	ஐங். 350
கருங்கால் வேம்பின் ஒண்பூ	—	குறுந். 24
வேம்பின் ஒண்பூ	—	புறம். 371
வேம்பின் பைங்காய்	—	குறுந். 196
கான வேம்பின் காய்	—	புறம். 389
வேப்ப ஒண்பழம்	—	குறுந். 67
வேம்பின் ஒண்பழம்	—	நற். 279
சிறியிலைக்,கருஞ்சினை வேம்பின் நறும்பழம்	—	ஐங். 339
வேப்பு நனையன்ன	—	ஐங். 30
வேம்பு மனைச்செரீஇ	—	புறம். 281

இச்சான்றுகளால் வேம்பு எனச் சொல்லப்பட்ட மாத்திரத்தாலேயே அச்சொல் வேம்பின் பூவைக் குறிக்கும் சொல்லாகாது என்பது பெறப்படும். சங்க இலக்கியத் துக்கு முற்பட்ட தொல்காப்பியத்தில் 'வேம்பு' எனும் சொல்லாட்சியைக் காணலாம்

''வேந்திடைத் தெரிதல் வேண்டி யேந்துபுகழ்ப்
போந்தை வேம்பே ஆரென வருஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும்'' (தொல். 1006)

எனப் பூ மலைந்து ஆடும் கூத்துகளை, வெட்சித்திணையின் பிறபகுதி நடவடிக்கை களைக் கூறுபிடித்துக் குறிப்பிடுகிறார். இவ்விடத்தும் 'என வருஉம் மாபெருந் தானையர் மலைந்த பூவும்' எனச் சொல்லப்பட்டதனாலேயே இச்சொல் வேம்பின் பூவைக் குறிக்கிறது. சங்க இலக்கியத்துக்குப் பிற்பட்ட சிலப்பதிகாரத்தில் 'வேப்பந்தார்' எனும் சொல்லாட்சியும் புறப்பொருள் வெண்பாமாலை எனும் புற விலக்கண நூலில் 'வேம்பின் இணர்' எனும் சொல்லாட்சியும் காணப்படுகின்றன. 'இணர்' எனும் சொல் இல்லாது போயின், இச்சொற்றொடர் பூவைக் குறிக்காது என்பது வெளிப்படை சினை, குழை, தளிர், பூ, காய், பழம் எனும் உறுப்புப் பெயர் கள் அனைத்தும் வேம்பு எனும் முதற்பெயரோடு புணர்ந்து வருகின்றன. இவற்றிற்கு வேம்பு என்பது அடை. இருபெயரெட்டுப் பண்புத் தொகையாகி வரும் இவை. புறநானூற்றில் (281) வரும் 'வேம்பு மனைச் செரீஇ' எனும் தொடரில் வேம்பு என்பது வேம்பின் குழையை, வேம்பின் தளிரைப் பயன்பாட்டுச் சூழலடிப் படையில், நாட்டுப்புற மக்களின் நம்பிக்கையைப் போற்றும் அடிப்படையில்

எடுத்தாளப்பட்டுள்ளது. சூழல், நோக்கம், பயன், நம்பிக்கை எனும் நிலைகளில் இவை நோக்கப்படுதல் வேண்டும்.

நள்ளிரவில், பாசறையில், வேலின் நுனியில் வேப்பந்தார் கட்டப்பட்டிருந்தமைக்கு அவசியம் என்ன எனும் வினாவிற்கு விடைகாணல் வேண்டும். வேப்பந்தார் அல்லது வேம்பின் ஒண்பூ மாலை பாண்டிய மன்னனின் மார்பில், முடியில் அணியப்படுதல் வழக்காறு. வேம்பு எனும் துறை பற்றிப் புறப்பொருள் வெண்பா மாலையின் பொதுவியற் படலம் ஒரு கருத்தைச் சொல்கிறது! பகைவர் பூசலிடத்து வெல்லும். போரையுடைய பாண்டியன் வண்டு நிறைந்த மகுடத்தின் மீதே புனையும் மலரினைப் புகழ்ந்து கூறும் புறத்துறை இதுவாகும்,

''விரும்பார் அமரிடை வெல்போர் வழுதி
சுரும்பார் முடிமிசைப் பூப்புகழ்ந் தன்று''

எனும் கொளுவுக்கு விளக்கமாக ஒரு வெண்பாவைக் காணலாம். அது,

''தொடியணிதோள் ஆடவர் தும்பை புனையக்
கொடியணிதேர் கூட்டணங்கும் போழ்தின்—முடியணியும்
காத்தல்சால் செங்கோல் கடுமான் நெடுவழுதி
ஏத்தல்சால் வேம்பின் இணர்''

எனும் பாடலாகும் கொளுவும் வெண்பாவும் முறையே பூவும் இணரும் வழுதியின் முடியில் அணியப்படுவதாகத் தெரிவிக்கின்றன என்பதைக் கவனித்தல் வேண்டும். 'பூ' என்பது ஒரு மலரைக் குறிக்கும் சொல். 'இணர்' என்பது மலரையும், மலரிதழையும், மலர்க்கொத்தையும் குறிக்கும் சொல். 'தார்' என்பது மலர்மாலையைக் குறிக்கும் சொல். நச்சினார்க்கினியர் 'வேம்புதலையாத்த' எனும் தொடருக்கு 'வேப்பந்தாரைத் தலையிலே கட்டின என்று பொருள் எழுதுகிறார். பூவையும் பூங்கொத்தையும் தலையில் சூடிக் கொள்ளலும் பூமாலையை மார்பில் சூடிக்கொள்ளலும் மரபு. வேப்பம் பூ மாலை வேலின் தலையில், முனையில் கட்டப்பட்டிருந்ததாகக் கூறப்படும் உரை விசாரணைக் குரியதாகும். வேப்பந்தார் பாண்டிய மன்னனின் மார்பில் தவழ்வதாகக் கூறுதல் வழக்காறு. இது அவர்க்கு உரிமையுடைய அடையாளப் பூவால் ஆகிய மாலை. வெண்கொற்றக் குடை, செங்கோல் முரசுக்கட்டில், அரசமரம் (அரசனுக்குரிய அடையாள மரம்), அடையாளப் பூ, பட்டத்து யானை இன்னபிற புனிதமானவை. இவற்றை மற்றையோர் தொடுதலும் பயன்படுத்தலும் அரசனுக்கு இழைக்கப்படும் அவமரியாதையாகவே கொள்ளப்படும். இவ்வளவு மரியாதை மிக்க அடையாளப் பூமாலையை ஒரு சேனாபதி தான் தாங்கிச் செல்லும் வேலின் நுனியில் கட்டியிருந்தான் எனப் பொருள் கொள்ளுதல் பொருத்தமாகப் படவில்லை. இது சாதாரணப் பயன்பாட்டில் உள்ள சாதாரணமான பூமாலையன்று. பாண்டியர்க்கே உரிய அரசு மரியாதை மிக்க வேப்பம் பூ மாலை. ஆகவே 'வேம்பு தலையாத்த' என்னுமிடத்து 'வேப்பந்தாரைத் தலையிலே கட்டின' எனப் பொருள் கொள்ளுதல் பொருந்தாது. பொருந்தாதாயின், பின், இவ் வேம்பு எனும் சொல் உணர்த்தும் பொருள்தான் என்ன எனும் வினாவெழுகிறது. அதனை அறிதலும் அதன் அவசியமுமே ஆய்வை மேலும் தூண்டுவனவாகும்.

மக்களின் நம்பிக்கையும் பழக்க வழக்கங்களும் மானிடவியலோடும் சமூகப் பண்பாட்டியலோடும் தொடர்புடையன. சங்க கால மக்கள் அணங்கு, பூதம், பேய்,

பேய்மகள், பேய்மகளிர் ஆகியவற்றில் நம்பிக்கை உடையவர்கள். பேய் முதலியன வற்றில் தமிழர் நம்பிக்கை எனத் தனி ஆய்வு மேற்கொள்ளும் அளவுக்குத் தகவல்கள் உள்ளன. அணங்கு பற்றி கலித்தொகை (52, 57, 71), நற்றிணை (155, 288, 319, 376), பதிற்றுப்பத்து (44, 71), அகநானூறு (7, 20, 22, 114, 372), ஐங்குறுநூறு (174) குறுந்தொகை (136, 204), பொருநராற்றுப்படை (வரிகள் 20, 35), பெரும் பாணாற்றுப்படை (459, 494), மதுரைக்காஞ்சி (164, 353, 446, 632), குறிஞ்சிப் பாட்டு (175), பட்டினப்பாலை (87) ஆகியன பேசுகின்றன. பேய் பற்றிக் கலித் தொகை (89, 94), நற்றிணை (73, 349), பதிற்றுப்பத்து (35), அகநானூறு (62, 130 142, 265, 303), புறநானூறு (62, 238, 356, 359, 369, 370, 371), குறுந்தொகை (263), மதுரைக் காஞ்சி (632) ஆகியன தகவல் தருகின்றன. பேய்மகள் பற்றிப் பதிற்றுப்பத்து (13,22,30,67), திருமுருகாற்றுப்படை (51), சிறுபாணாற்றுப்படை (197) பட்டினப்பாலை (260) ஆகியன தகவல் தருகின்றன. பேய்மகளிர் பற்றி மதுரைக் காஞ்சி (25, 163) செய்தி சொல்கிறது. பூதம் பற்றி நற்றிணை (192), பட்டினப்பாலை (57) ஆகியன குறிப்பிடுகின்றன. இவற்றின் மூலமாகப் பேய்களின் இயல்பு, அவை, தரும் அச்சம், மக்களுக்கு இவற்றின் மீதிருக்கும் நம்பிக்கை ஆகியவற்றை அறிந்து கொள்கிறோம்.

சங்க காலத்திற்குப் பிற்பட்ட இலக்கியமாகிய சிலப்பதிகாரத்தில் பேய் பிணத்தை விழுங்கிய நிகழ்ச்சி (கனாத்திறம் உரைத்த காதை : 18—22) யைக் காண்கிறோம் சீவகசிந்தாமணியில் விசயை சீவகனைச் சுடுகாட்டில் ஈன்றெடுத்தபோது ஆங்கே திரி தரும் பேய்களுக்கு அஞ்சினாள் என்பது போன்ற தகவல்கள் உள்ளன. காரைக் காலம்மையார் போன்ற சைவ சமயத் தொண்டர்களும் பேயாழ்வார் என்றழைக்கப் படும் வைணவ ஆழ்வாரும் பேய் வடிவில், பேய் போன்ற நடவடிக்கைகளில் இயங்கியதாகத் தெரிகிறது. மூத்ததிருப்பதிகத்தில் பேயோடு ஆடும் சிவன் கூறப் படுகிறான். சுடலை மாடன் வில்லுப்பாட்டில் பிணநாற்றம் வீசவரும் சிவன் மகன் சுடலைக்கண்ணுவைக் காண்கிறோம். சங்க இலக்கியம் தொடக்கம் சிற்றிலக்கியம் வரை, தமிழ் இலக்கியப் பரப்பு நெடுகிலும் பேய்பற்றிய தகவல்கள் எண்ணிறந்தன உள்ளன. சிற்றிலக்கிய 'வகைகளுள் ஒன்றான கலிங்கத்துப் பரணியில் (களம் பாடியது) பேய்களின் வகைகள் பற்றியும் செயல்பாடுகள் பற்றியும் மிக விரிவான செய்திகள் காணப்படுகின்றன. பின்கால் முடப்பேய், கைம்முடப்பேய், குருட்டுப் பேய், ஊமைப்பேய், செவிட்டுப்பேய், குறள்பேய், கூன்முதுகுப்பேய், பார்ப்பனப் பேய், சமணப்பேய், புத்தப்பேய், பார்வைப்பேய், சூர்பேய், நோக்கப்பேய், கூத்திப் பேய், விருந்தாகவந்த பேய், கணக்குப்பேய், கனவு காணும் பேய் ஆகிய பேய்களும் பிணந்தின் பூதமும் செயங் கொண்டாரால் குறிப்பிடப்படுகின்றன.

தேவராய அடிகள் எழுதிய கந்தர் சட்டி கவசத்திலும் பலவிதமான பேய்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

''வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராக்கதரும்
....

இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லினும் இருட்டினும் எதிர்ப்படும் அண்ணாரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்'' (108—117)

வல்லமை மிக்க பூதங்களும் இளமை முறுக்குடைய பேய்களும் துன்பங்களைச் செய்யும் கட்டுப்படாத முனிகளும் குழந்தைகளை வருத்திக் கொல்லுகின்ற, வீட்டுப் புறங்களில் வாழும் முனிகளும் தீயை வாயிலிருந்து வெளிப்படுத்துகிற கொள்ளிவாய்ப் பேய்களும் குறுகிய வடிவமுடைய குறளைப் பேய்களும் பெண்களைத் தொடர்ந்து பற்றித் துன்புறுத்தும் பிரமராட்சரும் இரசி, காட்டேரி என்று கூறப்படுகிற பெண்பாற் பேய்களும் பகலிலும் இரவிலும் எதிரில் தோன்றி அச்சமூட்டுகிற கருப்பண்ணனும் விட்டத்தில் தொங்கும் ஆங்காரப் பேய்களும் இன்னும் இருக்கக் கூடிய பல்வேறு பெயருடைய பலவாகிய பேய்களும் பற்றி இந்நூல் ஒரு பட்டியலே தருகிறது.

பேயால் பிடிக்கப் பெற்றவரிடமிருந்து பேயை விரட்டியடிக்க உடுக்கடித்து, மந்திரம் ஓதி, பாட்டுப்பாடி பேய்விரட்டும் சடங்குகள் செய்யும் பழக்கமும் தமிழ் நாட்டு மக்களிடையே உண்டு (ருக்மணி : பேயோட்டும் உடுக்கடிப் பாடல்கள், ம.கா.ப.,எம்.பில். ஆய்வேடு)

மேற்கண்ட இலக்கியங்கள் அல்லது இலக்கண நூல்களாலும் பேய் பற்றிய தமிழர் தம் நம்பிக்கைகள் அறியவருகின்றன. 11ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவரான ஐயனாரிதனார் எழுதிய புறப்பொருள் வெண்பாமாலையில் பேய்க்குரவை (தும்பைப் படலம்), பேய்க்காஞ்சி, தொட்டகாஞ்சி, தொடாக் காஞ்சி (காஞ்சிப் படலம்) ஆகிய துறைகள் பேய்களின் செயல்களையும் மக்களின் அச்சத்தையும் கூறுகின்றன. அதிரப் பொருகின்ற போர்க்களத்தில் மன்னனது மணித்தேரின் முன்னும் பின்னும் பேய்கள் குரவை ஆடுகின்றனவாம்.

''மன்னன் ஊரும் மறமிகு மணித்தேர்
பின்னும் முன்னும் பேயா டின்று''

என்ற கொளுவுக்கு (தும்பை : பேய்க்குரவை),

''முன்னரும் பின்னரும் மூரிக் கடற்றானை
மன்னன் நெடுந்தேர் மறனேத்தி—ஒன்னார்
நிணங்கொள் பேழ்வாய் நிழல்போல் நுடங்கிக்
கணங்கொள் பேயாடும் களித்து''

எனும் வெண்பா பொருள் விளக்கம் தருகிறது. பகைவரின் நிணத்தை உண்கிற, பிளந்த வாயை யுடைய பேய்கள் மன்னனின் வீரத்தைப் புகழ்ந்து அவனது நெடுந் தேரின் முன்னும் பின்னும் களித்தாடும் என்ற செய்தியால் பேய்கள் போர்க்களத்தில் இயங்குபவை, பேழ்வாய் உடையவை, நிணம் உண்பவை எனும் செய்திகள் அறியப் படுகின்றன.

''பிணம் புறங்கிய களத்து வீழ்ந்தார்க்கு
அணங் காற்ற அச்சுறீஇ யன்று''

(காஞ்சி : பேய்க்காஞ்சி)

"வியன் மனை விடலை புணகாப்பத்
துயன்முலை பேழ்வாய்ப் பேய்தொட்டன்று"

(காஞ்சி : தொட்டகாஞ்சி)

"அடலஞ்சா நெடுந்தகைபுண்
தொடலஞ்சித் துடித்து நீங்கின்று"

(காஞ்சி : தொடக்காஞ்சி)

ஆகிய புறப்பொருள் வெண்பாமாலைக் கொளுக்களால் பிணங்கள் மிகுந்த போர்க் களத்திலே புண்பட்டு விழுந்த மறவரை பேய் மிகவும் அச்சமூட்டியமையும் அகன்ற இல்லின்கண் மறவனது விழுப்புண்ணை பாதுகாத்திருக்கும்போது பெரிய வாயை யுடைய பேய்மகள் அப்புண்ணைத் தொட்டுந் பார்த்தமையும் ஒரு மறவனது விழுப் புண்ணைத் தீண்டச் சென்ற பேய் தீண்ட அஞ்சி நடுங்கிப் பெயர்ந்தமையும் தெரிய வருகின்றன. மேற்காட்டிய தொடாக்காஞ்சிக்கு விளக்கம் தரும் வெண்பா கீழ் வருமாறு :

"ஐயவி சிந்தி நறைபுகைத்து ஆய்மலர்தூய்க்
கொய்யாக் குறிஞ்சி பலபாடி—மொய்யிணர்ப்
பூப்பெய் தெரியல் நெடுந்தகைபுண் யாங்காப்பப்
பேய்ப்பெண் பெயரும் வரும்"

செறிந்த கொத்தினை உடைய மலர் இட்டுத் தொடுத்த மாலையினையுடைய தலைவனது விழுப்புண்ணை வெண்சிறு கடுகினைத் தூவிக் குங்கிலியம் முதலான நறுமணப் பொருள்களைப் புகைத்து மலர்களைச் சிதறி குறிஞ்சிப்பண் பாடிப் பாது காத்திருக்க அங்குவந்த பேய் அஞ்சி மீண்டு போகும், திரும்பவும் அவாவினால் வரும். கடி (பேய்)க்குப் பகையாக ஐயவி இருத்தலால் ஐயவிக்கு கடிப்பகை என்றே மற்றொரு பெயரும் உண்டு.

பேய்மகள் பன்றியின் கோடு போன்ற வெள்ளிய பற்களால் கடித்து ஈர்த்து தசையோடு கலந்த வெள்ளிய கொழுப்பைத் தின்று சுவை காண்பவளாய், குடல் களைத் தன் தலையில் மாலையாக அணிந்து குரவைக் கூத்தாடுவதாகப் புறநானூறு (371) கூறுகிறது. பேய்ப்பெண்டிர் பிணங்களைத் தழுவிப் பற்றிக்கொண்டு வெள்ளிய தசையைத் தின்றதனால் புலால் நாறும் மெய்யினை யுடையாராய்ச் சுடு காட்டில் கூத்தாடுவர் என மதுரைக் காஞ்சி (24—28) தெரிவிக்கிறது. பாசறையில் பகைவர் உடலில் இருந்து துண்டிக்கப்பட்டு விழுந்த தசைகளால் செய்யப்பட்ட அடுப்பில் ஆக்கப்படும் கூழில் குடல்கள் பொங்க,மண்டையோட்டை அகப்பையாகக் கொண்ட துடுப்பினால் துழாவி, ஊன் சோறாகிய பிண்டத்தைப் பேய்கள் சமைக் கும் எனப் புறநானூறு (372) கூறுகிறது.

இலக்கிய, இலக்கண நூல்களில் மட்டுமல்லாது கல்வெட்டுகளிலும் பேயின் நிணம் விரும்பும் வேட்கை புலனாகிறது. பேய், புண்ணில் விரல்விட்டு அளையும் என்பதும் பின்னர் விரலை வாயிலிட்டுச் சப்பி நிணத்தை உண்ணும் என்பதும் இக்கல் வெட்டுகளால் தெரியவருகின்றன. திருச்சிராப்பள்ளியை அடுத்து செந்தலை என்று வழங்கும் சந்திரலேகைச் சதுர்வேதி மங்கலம் என்ற ஊரில் உள்ள சிவன் கோயிலில் சில கல்வெட்டுச் சாசனங்கள் உள்ளன. பல்லவர்களின் கீழ் ஆண்டு வந்த

முத்தரையர்களில் பெரும்பிடுகு முத்தரையன் சுவரன்மாறன் எனும் மன்னனுடைய வெற்றியைப் பலர் பாடி வைத்துள்ளனர். மழநாட்டுத் திருப்பாச்சில் என்ற ஊரைச் சேர்ந்தவரும் வேளிர் குலத்தவருமான 'பாச்சில்வேள் நம்பன்' என்ற புலவர் பாடிய வெண்பா ஒன்று மேற்சொன்ன சிவன் கோயில் சாசனத்தில் வெட்டப்பட்டுள்ளது.

.... —வழிகட்பேய்
புண்ணளைந்து கையூம்பப் போர்மணலூர் வென்றதே
மண்ணளைந்த சீர்மாறன் வாள்"

எனும் அவ்வெண்பாவின் ஈற்றிரண்டடிகளைக் காண்க. பேயின் புண்ணளையும் செய்கையும் கையூம்பும் செய்கையும் தெளிவாகக் குறிக்கப்பட்டிருத்தல் காணலாம்.

பேய் எனும் சொல் அச்சுறுத்துவது, அஞ்சுவது என்னும் பொருள்படுவதாகத் தொல்காப்பியம் குறிப்பிடும் தீய ஆவிகளைப் பேய், பிசாசு, காத்துக்கருப்பு, குட்டிக் கருப்பு என்று மக்கள் அழைக்கின்றனர். பேயின் நிறம் கருப்பாதலால் கருப்பு என்பதே பேயைக் குறிக்கும் பண்பாடு பெயராயிற்று என்பர் தேவநேயன்.[11] காற்றின் கண்ணும் பேய் உறையுமாதலால் காத்துக் கருப்பு என்ற பெயர் வந்தது என்பர் தே. ஞானசேகரன்[12]. இவை தீமை மட்டுமே செய்ய வல்லன என மக்கள் நம்புகின்றனர். இவ்வாவிகள் மனிதனைக் காட்டிலும் மிக்க ஆற்றல் பெற்றவை என்பதால் இக் காத்துக் கருப்பை வழிபட்டு அவற்றின் தீமைகளிலிருந்து விடுபடலாம் என மக்கள் வழிபாடும் செய்கின்றனர் என்பார் ஸ்டீபன்.[13]

ஆக, இலக்கியம், இலக்கணம், நாட்டுப்புற மக்களின் நம்பிக்கை ஆகிய சான்றுகளால் பேய்கள்,

(1) பிணம் உள்ள இடங்களான போர்க்களம், சுடுகாடு ஆகிய இடங்களில் இயங்குவன

(2) பிணங்களின் நிணத்தைப் பேழ்வாய் நிரம்ப நிறைத்து விழுங்குவன

(3) உயிர் பிரியாத, புண்பட்ட வீரரையும் உண்பதற்காக நெருங்குவன; புண்ணைத் தொட்டுப் பார்க்க விரும்புவன.

(4) மனையாள் காவலுக்கும் ஐயவிக்கும் வேப்பிலைத் தெரியலுக்கும் குங்கிலியப் புகைக்கும் அஞ்சுவன

(5) வழிபாடு செய்யுமிடத்து தீமை செய்யாது விடுவன

எனும் செய்திகள் தெரியவருகின்றன. பேய், பிசாசு போன்ற தீய சக்திகளிடமிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ள மக்கள் ஐயவி, வேம்பின் ஒண்தளிர் ஆகியவற்றைப் பயன்படுத்தினர். தமது புண்பட்ட வீரரைக் காக்க மனையிறைப்பில் வேப்பிலையைச் செருகி வைத்த செய்தியைப் புறநானூறு (281) கூறுகிறது.

"தீங்கனி இரவமொடு வேம்புமனைச் செரீஇ
வாங்கு மருப்பு யாழொடு பல்லியம் கறங்க"

என்பது அப்பாடலின் பகுதி. வேந்தன் பொருட்டுப் போரில் புகழ் உண்டாகப் பொருது விழுப்புண்பட்ட வீரனொருவன் தன் மனைக்கண்ணே இருந்தான். மனையுறை மகளிர் அவன் புண்ணை ஆற்றி வந்தனர், தீங்கனி இருள்மரத்தின் தழையுடனே வேப்பிலையையும் சேர்த்து மனையிறைப்பில் செருகி வைத்திருந்தனர். ஐயவி சிதறி அகில் புகைத்து வீரனைக் காவல் செய்திருந்தனர் எனும் செய்தி இப் புறப்பாடலால் புலனாகிறது. ஒரு போர்க்கால மாலை வேளையில் விழுப்புண் பட்ட வீர மறவர்கள் மிகுந்த ஒரு குடியிருப்பின் நிலையை வெள்ளை மாளார் எனும் புலவர் பின்வரும் புறநானூற்றுப் பாடலில் (296) விவரிக்கிறார்.

"வேம்பு சினை ஒடிப்பவும் காஞ்சி பாடவும்
நெய்யுடைக் கையர் ஐயவி புகைப்பவும்
எல்லா மனையும் கல்லென் றவ்வே"

என்பது பாடற்பகுதி. வேம்பின் கிளைகளை ஒடிப்பதாலும் காஞ்சி பாடுவதாலும் நெய்யுடைய கையராகிய மனையோர் வெண்சிறு கடுகினைப் புகைப்பதாலும் எல்லோருடைய வீடுகளிலும் 'கல்'லென்ற ஆரவாரம் கேட்கிறது என்பது இப்பாடற்பகுதியின் பொருள். வேம்பின் கிளையை ஒடித்து அதன் ஒண்தழையை மனையிறைப்பில் செருகி, பேய்களைத் தமது மனையிடத்தே வாராது தடுத்து, விழுப்புண் பட்ட வீரரைக் காக்கும் மனையோரை இப்பாடல் தெளிவாகக் காட்டுகிறது.

புண்பட்டோரைக் கண்டு பரிகரித்தல் (குணமாக்குதல், மருத்துவம் செய்தல்) பொருட்டாகப் பாசறை வேந்தன் செல்லுதல் வழக்கம். சான்றாக,

"தழிச்சிய வாட்புண்ணோர் தம்மில்லந் தோறும்
பழிச்சியசீர்ப் பாசறை வேந்தன்—விழுச்சிறப்பின்
சொல்லிய சொல்லே மருந்தாகத் தீர்ந்தன
புல்லணார் வெய்துயிர்க்கும் பண்"

(தொல். பொருள். புறத். சூத்திரம் 8 நச்சினார்க்கினியர் மேற்கோள்)

எனும் பாடலைக் காணலாம். இவ்வழக்கத்திற்கு ஏற்ப, நெடுநல்வாடையில் பாசறையில், மன்னன், புண்பட்ட வீரரை அதுவும் நள்ளென் யாமத்தில் 'கழுது வழங்கு யாமம்' என அகநானூறு 122 கூறுகிறது. கழுது—பேய். நள்ளென் யாமம், நள்ளிரவுப் பொழுதில் பேய்கள் உலவும் என்பது பொருள் பார்த்து ஆறுதல் கூறி மறுநாள் நடக்கவிருக்கும் போருக்கு உற்சாகப்படுத்திக் கருமமே கண்ணாக இயங்கி வரும் வேளையில் மன்னனுடன் சென்ற சேனாதிபதியின் கையில் இருந்த வேலின் நுனியில் வேம்பின் ஒண்டழை இருந்திருக்குமா அல்லது வேப்பந்தார் இருந்திருக்குமா எனவினவும்போது வேம்பின் ஒண்டழையே இருந்திருக்க வேண்டும் எனும் முடிவுக்கு வருதலே பொருத்தமாக இருக்கும். பிணம் மிகுந்த போர்க்களம், புண்டபட்ட வீரர் தங்கியிருக்கும் பாசறை நள்ளிரவுப் பொழுது ஆகிய இடம், காலச் சூழ்நிலையில் பேய் முதலாகிய தீய சக்திகளிடமிருந்து காத்தற் பொருட்டு வேம்பின் ஒண்டழைத் தெரியல் பயன் கொள்ளப்பட்டிருந்தமை புலனாகிறது. சங்க இலக்கியத்திலேயே இதற்கு மேலும் சில சான்றுகளைக் காணலாம்.

பெரும்பாணாற்றுப்படையில் உமணப்பெண் உப்புப்பொதிகள் ஏற்றப்பட்ட வண்டியினை ஓட்டிச் செல்கிறாள். இவள் தனது கைக்குழந்தையை தன்னோடு கொண்டு

செல்பவள் ஆதலின் வழியில் தன் பிள்ளைக்குத் தீய சக்திகளால் தீங்கு நேராத படிக்கும் பூங்கொத்தையுடைய வேம்பினுடைய மேன்மையான இலையைக் காவலாக்கிக் கொண்டு செல்கிறாள்.

"சகடப் புதவின் மூக்கின் கண்ணே வேப்பிலை
மிடைந்த மகடூஉ இருந்து துரம்ப என முடிக்க"

என நச்சினார்க்கினியர் பொருள் கூட்டுவார். இப்பகுதி

"கோட்டிணர் வேம்பின் ஏட்டிலை மிடைந்த
படலைக் கண்ணி ...."

(பெரும்பாண். 59-60)

எனும் அடிகளால் விளக்கமுறுகிறது.

இதுபோக, பிரிதலும் பிரிதல் நிமித்தமுமாகிய உரிப்பொருளைக் கொண்ட பாலைத் திணைப் பாடல்கள் சில இவற்றில் அருஞ்சுரத்தில் செல்லும் தலைமகன் வேம்பின் தெரியலை சூட்டிக் கொள்வதாம் மேற்படி தீய சக்திகளிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்வதாகச் செய்திகள் காணப்படுகின்றன.

தமிழர்க்குப் பேய் நம்பிக்கை (Bogyism) உண்டு. பேய்களின் ஆற்றலில் நம்பிக்கையும் (Demonisim) உண்டு. இவர்தம் பேய்பற்றிய கொள்கைகளாக (Demonalatory) பல செய்திகளைக் கூறலாம். பேய்கள் உதிரம், நிணம் ஆகியன வற்றை விரும்புவன என்பதால் பூப்படைந்த கன்னியரும் மகவீன்ற இளந்தாயரும் இத்தீய சக்திகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேப்பிலைக் கொத்தைத் தம்மோடு எப்போதும் வைத்திருப்பர். இயற்கைக் கடன் கழிக்க வீட்டுக்குக் கொல்லைப் புறத்தே வெளியில் சென்று வரும்போது தம்மோடு வேப்பிலைக் கொத்தைக் கொண்டு செல்வர். வெளியூர்ப் பயணத்தின்போது இடைவழியில் உண்பதற்காகக் கொண்டு செல்லும் உணவிலும் அசைவ உணவு வகைகளான இறைச்சி, மீன், முட்டை ஆகியனவற்றைக் கொண்டு செல்லாமைக்குரிய காரணமும் இதுவேயாகும். உதிரம், நிணம் இவற்றின் மணத்தைக் கண்டறிந்து விட்டால் பேய்கள் உடன் தொடருமாம். பூப்புச் சடங்குகளின் (Puberty Rituals) போதும் தூய்மைச் சடங்குகளின் போதும் (Purification Rituals) கர்ப்பகாலச் சடங்குகளின் போதும் (Rites Pragnancy) இரவு வழிபாடுகளின் போதும் (Vigils) வேப்பிலையைப் பயன்படுத்துதல் வழக்கம். அந்தி, சந்தி, உச்சிப்பொழுது (நண்பகல்) பாதிராத்திரி (நள்ளென் யாமம்) ஆகிய நேரங்களில் வெளியே சென்றுவரும் பூப்படைந்த கன்னியர், இளமங்கையர் தம்முடன் வேப்பிலைக் குழையை வைத்திருந்தால் எத்தீங்கும் நேராது என்பர். இது நாட்டுப்புற நம்பிக்கை வேப்பிலையின் சக்தி பற்றி 'அபிதான சிந்தாமணி' பின்வரும் செய்தியைத் தெரிவிக்கிறது.

"வேப்பிலை : மகா மாரிக்குரிய பத்ரம் (இலை) இதனைப் பூதப் பிரேத பிசாசங்கள் விலகும் பொருட்டு மந்திரப் பிரயோகங்கள் செய்யுமிடத்தும் மகா மாரியின் கடிசாதிகள் ஸ்தாபிக்கும் இடத்தும் மகாமாரியை யெண்ணிச் சத்ரு

(பகைவர்) நாசத்தின் பொருட்டுச் செய்யும் ஓமத்து விறகாகவும் ஆகமங்களிலும் ஆக்னேயப் புராணம் மகாமாரி வித்தையிலும் கூறப்பட்டிருக்கிறது''[14]

என ஆ. சிங்காரவேலு முதலியார் கூறும் கருத்தில் இவ்வேப்பிலையின் பயன்பாடு விளக்கப்பட்டிருத்தல் காணலாம். 1. பூதம்,பிசாசு ஆகியன பிரேதத்தை(பிணத்தை) விரும்புவன 2. இவை விலக மந்திரப் பிரயோகம் செய்யும் பொழுது வேப்பிலை பயன்படுத்தப்படுகிறது.

இந்நாட்டுப்புற நம்பிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும் அதே வேளையில் வேப்பிலையின் மருத்துவப்பண்பு பற்றிய ஆராய்ச்சி ரீதியான செய்திகளும் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும் வேப்பமரத்தின்கண் வீசும் காற்று உடல் நலத்தை மிகுவிக்கும் என்றொரு நம்பிக்கை நாட்டார் இடையே உண்டு. தேக ஆரோக்கியத்திற்கு இதன்நிழலும் இதன் மேல் பட்டு வீசும் காற்றும் உகந்தன என்பர். இது பற்றி ஒருநாட்டுப் புறக்கதை கூறப்படுகிறது.

கதை:

ஒரு மகன் தன் தாயைப் பிரிந்து தூரதேசம் போய் பொருள் சம்பாதிக்க முடிவு செய்தானாம். தாய்க்கு மகனைப் பிரிந்திருப்பதில் விருப்பம் இல்லை. மகனோ பிடிவாதமாயிருந்தான். ஆகவே தாய் தன் மகனிடம் ஒரு உறுதி மொழி கேட்டாளாம். ''மகனே, நீ போகிறபோது எப்போது ஓய்வெடுக்க நினைத்தாலும், இரவில் உறங்க நினைத்தாலும் புளிய மரத்தினடியில் தான் ஓய்வெடுக்கவேண்டும், உறங்கவேண்டும். திரும்பி வருகிறபோது வேப்ப மரத்தினடியில்தான் இப்படி ஓய்வெடுக்கவும் உறங்கவும்வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டாளாம். மகனும் தாய் கேட்கும் உறுதி மொழியின் சூட்சுமத்தை அறியாது அவ்வாறே செய்வதாக உறுதி அளித்தானாம். போகிற வழியில் தாய் சொன்னபடி புளிய மரத்தினடியில் படுப்பானாம். சில தினங்களில் உடல்நிலை சீர்கேடடைந்து, இனிமேல் மேற்கொண்டு பயணமே செய்யமுடியாது எனும் சூழ்நிலை உண்டாகிவிட்டதாம். சரி, திரும்பிவிடுவோம் என முடிவெடுத்துத் திரும்பிவரப் பயணம் செய்தானாம். வேப்ப மரத்தினடியில் ஓய்வெடுப்பதும் தூங்குவதுமாகக் கழித்த சில நாட்களுக்குள் உடல்நிலை சீரடையத் தொடங்கிவிட்டதாம். வீட்டுக்கு வந்து சேர்வதற்குள் பூரணசுகம் உண்டாகி விட்டதாம். தாயும் மகனைச் சிரித்த படியே வரவேற்றாளாம்.

இக்கதை மூலமாக வேம்பின் மருத்துவகுணம் வெளிப்படுகிறது. உடல் நலத்தைச் சீர்படுத்தும் சக்தி வேம்புக்கு உண்டு என்பது கருத்து 3000 ஆண்டுகளுக்கு முன்பேயே பூச்சிகளிடமிருந்து தானியத்தைப் பாதுகாக்கக் கிடங்கு களில் வேப்பிலையைத் தானியத்தோடு கலந்து வைக்கும் பழக்கம் சீன நாட்டிலும் உண்டு. அம்மைப்புண், வேறு வகைப்பட்ட ஆறாத நாட்பட்ட புண் ஆகியவற்றுக்கு கிராம மக்கள் வேப்பிலையை அரைத்துப் போடுவர். தீப்புண்ணுக்கு வேம்பின் மரப்பட்டையைக் காயவைத்துச் சுட்டு எண்ணெய் கலந்து தடவ, புண் குணமாகும் என்பர். குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் வேம்பின் கொழுந்தை அரைத்து

குடிக்கக் கொடுத்தால் குடல் பூச்சிகள் மடிந்து மலத்தோடு வெளிவரும் என்பர்; செரிமானம் அதிகரிக்கும், நன்றாக உணவு உட்செல்லும் என்றும் கூறுவர். தோல் வியாதிகளுக்கும் இது நன்மருந்து. புனிதமான ஓமத்திற்கு இதன் சுள்ளிகள் பயன்படுகின்றன. புத்தாண்டு தினத்தன்று (சித்திரை முதல் தேதி) வேம்பின்பூவை வெல்லப் பானகத்தோடு கலந்து குடிப்பர். இவை நாட்டுப்புற மருத்துவம் (Folk Medicine) சார்ந்த நம்பிக்கைகள். இது பற்றி எஸ்.கே. ஜெயின் என்பார் தமது 'மருத்துவத் தாவரங்கள்' எனும் நூலில்,

> "The drug consists of dried stem bark, leaves and root bark. The bark is bitter tonic, astringent and anti periodic. That is, it is useful in feavers it breaks the periodic sequence of feavers and is useful in skin diseases. The leaves are bitter and are largely applied on skin diseases and boils, a decoction of leaves is also taken internally. The antibiotic activity of leaves and roots of the tree and their utility in skin diseases have been confirmed experimentally"[15]

எனக் குறிப்பிட்டுள்ளார். வேம்பு மலைவேம்பு, நாட்டுவேம்பு என இருவகைப்படும். மலைவேம்பின் தண்டு, கிளை, ஈர்க்கு ஆகியன கருநிறத்தில் இருக்கும். இலைகள் நாட்டுவேம்பைக் காட்டிலும் அளவில் சிறியனவாகவும் பெருங்கொத்துகளோடும் காணப்படும். பொதுவாக வேம்பு (Nim-Margosa tree; Family: Meliaceae) என்றழைக்கப்படும் இது தமிழ்நாட்டின் வட மாவட்டங்களில் வேப்பமரம் என்றும் தென்மாவட்டங்களில் வேம்பு என்றும் அழைக்கப்படுகிறது. தெலுங்கிலும் மலையாளத்திலும் 'வேப்ப' என்றே அழைக்கப்படுகிறது. கன்னடத்தில் இது 'பேவு' என்றே அழைக்கப்படுகிறது. தெய்வீகச் சம்பந்தமான காரியங்களிலும் வேம்பின் குழை பயன்படுகிறது. மகாசக்தியின் வடிவங்களாகிய துர்க்கையம்மன், பொன்னியம்மன், மாரியமமன், படைவேட்டம்மன், எல்லையம்மன், பவானியம்மன், கங்கம்மன் ஆகிய எல்லாத் தெய்வங்களுக்கு செய்யப்படும் திருவிழாக்களில் இவ் வேம்பின் குழையை மக்கள் பக்தி பூர்வமாகப் பயன்படுத்துகின்றனர். இத்தெய்வங் களுக்குப் போடும் மாவிளக்குப் படையலின்போது பிரசாதமாக மாவுடன் வேப்பிலை யைக் கலந்து கொடுப்பர். கூழ் ஊற்றும் நேர்த்திக்கடனின் போதும் பிரசாதமாகத் தரப்படும் அம்மனுக்குப் படைத்த கூழில் வேப்பிலை கலந்திருக்கும். ஊர்த்திருவிழா (ஜாத்திரை)யின்போது 'காப்புக் கட்டுதல்' என்று ஒரு நிகழ்ச்சி உண்டு. வைக்கோல் புரிக்கயிற்றில் வேம்பின் குழையை வரிசையாகக் கட்டி, தெருவின் குறுக்காக இரு கம்பங்கள் நாட்டி ஊரின் எல்லையிலிருந்து எல்லா வீதிகளிலும் கட்டிவைப்பர். அம்மனுக்கு வைக்கப்படும் பொங்கலின் போது பொங்கல் பானையின் கழுத்துப் பகுதி யில் இப்படிப்பட்ட மாலையைக் கட்டுவர். அம்மனுக்கு நேர்ந்து கொள்கிற மற்று மொரு பிரார்த்தனை 'வேப்மஞ்சேலை கட்டுதல்' என்பதாகும். பக்தர்கள் தங்கள் ஆடைகளை நீக்கிவிட்டு வேம்பின் குழையால் ஆகிய தழையாடையை (வைக்கோல் புரிக்கயிற்றில் நெருக்கமாகச் செருகப்பட்ட தழையால் ஆனது) அணிந்து அம்மன் சன்னதியை மும்முறை வலம்வருவர். இந்நேர்த்திக் கடனின்போதும் வேம்பின் குழை பயன்கொள்ளப்படுகிறது, அம்மைநோய் நீங்கப்பெற்ற நபருக்கு நீர் முழுக் காட்டும்போது வேம்பின் குழையைத் தலைமேல் வைத்து அதன்மேல் நீர்விட, ஒழுகும் நீர் வேம்பின் குழையில் பட்டே அந்நபரின்மேல்படும். இப்படி வேம்பில்

பட்டொழுகும் நீர் அம்மை நோய்க்கு ஆட்பட்டவரின் உடலின் மீது பட, தழும்பும் புண்ணும் விரைந்து குணமாகும் என நம்புவர். அம்மை நோய் என்பது அம்மனின் கோபத்தால் வருகின்ற நோய் எனல் கருதத்தக்கது.

தமிழரின் புராதனக்காலம் முதல் தற்காலம் வரை இவர்க்குப் பேய் முதலானவற்றில் நம்பிக்கையும் இவற்றால் உண்டாகும் தீமை பற்றிய அச்சமும் இதற்குப் பரிகாரமாக வேப்பிலையைப் பயன்படுத்தும் வழக்காறும் உண்டு. புண், பிணம், நிணம், உதிரம் இருக்கும் இடங்களில் பேயின் நடமாட்டம் மிகுதி எனும் நம்பிக்கை உண்டு. இதற்கு ஒப்பவே, தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்று நச்சினார்க்கினியரால் நம்பப்படுகிற ஒரு தலைமகன், வேந்தன் 'களிறு களம்படுத்த பெருஞ்செய் யாடவர் ஒளிறுவாள் விழுப்புண்' காணச்சென்ற போது புண்பட்ட வீரரின் அண்மையில் திரிதரும் பேய்களிடமிருந்து தம் மன்னனைக் காக்கவும், அப்புண்பட்ட வீரரின் அண்மையில் திரிதரும் பேய்களைச் சேய்மைப்படுத்தவும் மன்னனுடன் சென்ற முன்னோன் தன் கையில் ஏந்தியிருந்த வேலின் நுனியில் வேம்பின் தளிரை, குழையைக் கட்டியிருந்தான் எனப்பொருள் காணல் மக்களின் நாட்டுப்புற நம்பிக்கை, பழக்க வழக்கம், நாட்டுப்புற மருத்துவம் உள்ளிட்ட நாட்டார் வழக்காற்றியலுக்குப் பொருத்தமான செயலாகும். மன்னனது மார்பில் இருக்கும் தார் அடையாளப் பூவைக் குறிக்கும். மன்னன் சென்னியில் (தலை, முடி, உச்சி) மிலைந்த தெரியல் மன்னனை (பொருநாற்றுப்படை 144—145) அடையாளங்காட்டும். ஆனால் முன்னோன் ஏந்திச்செல்லும் வேலின் நுனியில் கட்டப்பட்ட தளிர், குழை வேறு பயன்பாட்டை, நோக்கத்தைச் சூழ்நிலை யடிப்படையில் சுட்டும். இடம் நோக்கிச் சூழல் நோக்கிப் பொருள் கொள்ளுதல் சிறப்புடையது. புறப்பொருள் வெண்பா மாலை, காஞ்சித்திணை, தொடாக்காஞ்சித்துறையில் வரும் வெண்பாவில் இடம் பெறும் 'மொய்யிணர்ப் பூப்பெய் தெரியல்' எனும் தொடர்க்கும் இவ்விதமே பொருள் கொள்ள வேண்டும். புண்பட்ட நெடுந்தகையைப் பேயிடமிருந்து காக்க ஐயவி சிந்தி, நறைபுகைத்து, ஆய்மலர் தூய், குறிஞ்சிப் பண்பாடி மனையோர் காத்திருக்கப் பேய்ப்பெண் வரும் பெயரும் எனும் சூழலில் அந்நெடுந்தகை வேம்பின் அக்குழை தெரியல் அணிந்திருந்தான் எனப் பொருள் காணலே சாலச்சிறந்ததாகும்.

முடிவுகள்:

1. 'வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம்' எனும் தொடரில் வரும் வேம்பு பாண்டியர்க்கு உரிய அடையாளப்பூவைச் சுட்ட வந்ததன்று. புண்பட்ட வீரர். பிணம் மலிந்த போர்க்களப் பாசறை, பேய் திரியும். நள்ளிரவுப் பொழுது ஆகிய இடச்சூழ்நிலை, காலச்சூழ்நிலையிலிருந்து மன்னனையும் மற்றையோரையும் காக்கக் கட்டப்பட்ட பேய்க்குப் பகையாகிய, வேம்பின் ஒண்குழையை; தளிரைச் சுட்டி நிற்பது.

2. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுடைய வரலாற்றுச் சிறப்பு மிக்க போர்ச் செய்தி இலக்கியங்களாலும் சின்னமனூர்ச் செப்பேடு முதலிய ஆவணங்களாலும் உண்மை என உறுதிப்பட்டிருப்பது உண்மையே யாயினும் இந்நெடுநல் வாடையின் பாட்டுடைத் தலைவன் இவனே என்பதற்கு ஆதாரம் இல்லை.

3. சங்க காலத்துப் புலவராகிய நக்கீரனார் அகஇலக்கண மரபு மீறி குடிப் பெயரையும் இயற்பெயரையும் அறிந்து கொள்ள இடமளிக்கும் குறிப்பு களைத் தந்து நூல் எழுதியிருக்க மாட்டார். நச்சினார்க்கினியர் கொண்ட பொருள், நக்கீரனார் கொண்ட கருந்து எனச் சொல்ல இயலாது.

4. பேய் பற்றிய நம்பிக்கை, பழக்க வழக்கம், மருத்துவம், பழமரபுத் தெய்வீக நம்பிக்கை இன்ன பிறவற்றோடு வேம்பு தொடர்புடையது. இது பேய்க்குப் பகை. ஆகவே பேய்க்குப் பரிகாரமாக இதனைப் பயன் கொள்ளல் வழக்காறு.

5. நெடுநல்வாடை ஒரு தூய அகப்பாட்டு. வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம், பலரொடு முரணிய பாசறைத்தொழில் எனும் தொட ர்களுக்குப் பொருள் நச்சினார்க்கினியர் கொண்ட பொருள் பொருத்தமின்மை நிறுவப் பட்டதால், இப்பாட்டின் தலைமகன் ஓர் அரசன் என்றாகி சுட்டிப் பெயர் குறிப்பிடாமையின் தூய அகப்பாட்டு என்பதில் ஐயமில்லை.

குறிப்புகள் ;

1. க. கைலாசபதி, ஒப்பியல் இலக்கியம், பாட்டாளிகள் வெளியீடு, சென்னை ஜனவரி, 1978, ப. 69,

2. அனந்தராமையர், கலித்தொகை, நோபில் அச்சுக்கூடம், சென்னை, 1930,

3. மர்ரே பதிப்பையொட்டி வெளியிட்ட நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை பதிப்புகள்.

4. மு, வை. அரவிந்தன், உரையாசிரியர்கள் மணிவாசகர் நூலகம், ஏப்ரல் 1977. ப. 223,

5. உ. வே. சாமிநாதய்யர், பத்துப்பாட்டு மூலமும் மதுரையாசிரியர் பாரத் துவாசி நச்சினார்க்கினியர் உரையும், கமர்ஷியல் அச்சுக்கூடம், சென்னை, 1918, பக், 33-34.

6. தெ. பொ. மீனுட்சிசுந்தரனார், 'The Teaching of Tamil Grammar' in collected papers, அண்ணாமலை நகர், 1961, ப. 114.

7, கி. லட்சுமணன், இந்திய தத்துவ ஞானம், சென்னை, 1960, ப. 2.

8. சரளா ராசகோபாலன், சங்க இலக்கியத்தில் தோழி, சென்னை,

9. பொ. வே. சோமசுந்தரனார், பத்துப்பாட்டு மூலமும் உரையும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1966, ப. 8.

10. க. கைலாசபதி, பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் மக்கள் வெளியீடு, சென்னை, செப்டம்பர் 1978, ப. 61.

11 மு. இராகவையங்கார், சாசனத் தமிழ்க்கவி சரிதம், இரண்டாம்பதிப்பு, 1958, பக். 17—18, (செந்தமிழ்த் தொகுதி 6. பக். 6—12 மேற்கோளாக எடுத்தாளப்பட்டுள்ளது)

12. தேவ நேயன், தமிழர் மதம், நேசமணி பதிப்பகம், காட்டுப்பாடி, 1972, ப. 19.

13. தே. ஞானசேகரன். மக்கள் வாழ்வில் மந்திரச் சடங்குகள். பார்த்திபன் பதிப்பகம், மதுரை; முதல் பதிப்பு, ஏப்ரல் 1987, ப. 45

14. Stephen Inglis, A Village Art of South India, Madurai Kamaraj University Publication Division, 1980, P. 50

15. ஆ. சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, ஏசியன் எசுகேஷனல் சர்வீசஸ், புதுடெல்லி, 1982

16. S. K. Jain, Medicinal Plants, National Book Trust, New Delhi, May 1968, P. 28

நூல் மதிப்புரை

நூலின் பெயர் : தெலுங்கு இலக்கிய வரலாறு

ஆசிரியர் : டாக்டர். டி. எஸ். கிரிபிரகாஷ்; பா. ஆனந்தகுமார்

பதிப்பகம் : பார்த்திபன் பதிப்பகம், மதுரை,

ஆண்டு : 1986

பக்கம் : IX + 268

விலை : ரூ. 25. 00

ஒப்பிலக்கிய ஆய்வு முதன்மை பெற்று வளர்ந்து வரும் இக்காலத்திற்குப் பிற மொழிப்படைப்புகளின் மொழிபெயர்ப்பு எந்த அளவு முதன்மை வாய்ந்ததோ, அந்த அளவு, தெரிந்த மொழியொன்றில் பிறமொழி யொன்றன் இலக்கிய வரலாறு அமைதலும் இன்றியமையாததாகும். ஆங்கில—தமிழ் ஒப்பீட்டுக் கல்விக்கு ஒருபடி மேற் சென்று, இந்திய மொழி—தமிழ் ஒப்பீட்டிலக்கியக் கல்விக்கு வாய்ப்பாக, சாகித்திய அகாதெமியின் பல இலக்கிய வரலாறுகள் துணையாகின்றன. தெலுங்கு இலக்கிய வரலாறு சாகித்திய அகாதெமி வழி ஆங்கில மொழியில் வந்து நின்றுவிட்ட கட்டத்தில் தமிழில் ஒரு தனிநூல்—மொழிபெயர்ப்பாக அன்றி—அப்பொருள் பற்றி எழுந்துள் ளமை வரவேற்கத் தக்கது.

நூலின் முழுமை, இயல் பகுப்பில் வெளிப்படுகின்றது. தெலுங்கு மொழியின் தோற்றமும் வளர்ச்சியும், புராண-இதிகாசம், காப்பியம், பிரபந்தம்,பக்தி இலக்கியம், தென்னகத் தெலுங்கு இலக்கியம், சதகம், நாடகம், தற்காலக் கவிதை, நாவல், சிறு கதை,உரைநடை இலக்கியம், நாட்டுப்புற இலக்கியம்,இலக்கணம் எனப் பொருளடிப் படையிலும் இலக்கிய வகை அடிப்படையிலும், கால—இட அடிப்படையிலும் பலவாறாக நூற் பொருண்மை அணுகப்பெற்றுள்ளது.

வடமொழியின் பரதரது நாட்டிய சாஸ்திரமும் வியாச பாரதமும் 'ஆந்திர' என்பதைக் குறிப்பிடுவது நாட்டின் பழமையை உணர்த்தும். கி.பி. 11ஆம் நூற்றாண்டிற்குப் பின்பு தெலுங்குக் கவிஞர் ஆந்திரமு, தெனுகு, தெலுகு எனும் சொற்களை மொழியைச் சுட்டப் பயன் கொண்டுள்ளனர். கி.பி. 6ஆம் நூற்றாண் டின் 'கலமள்ள சாசனம்' தெலுங்கின் முதல் வரிவடிவத்தையும், 11ஆம் நூற்றாண் டின் நன்னயா பாரதம் இலக்கியத் தோற்றத்தையும் வழங்குகின்றன.

அரசியல், சமய, சமூகச் சூழல் காரணமாக, கி.பி. 11 முதல் 15 வரையான நூற்றாண்டுகளில் புராண - இதிகாசங்களான இராமாயண பாரத பாகவதங்கள் தெலுங்கில் தழுவலாகவோ மொழிபெயர்ப்பாகவோ ஆக்கம் பெற்றன. மூவர் அல்லது நால்வரின் இணைந்த முயற்சியாகப் பெரும்படைப்புருவாவதை ஆந்திர பாரதமும், பாகவதமும் காட்டுவது தனித்த சிந்தனைக்குரியது. கவிமூவரான திக்கன, நன்னய, எர்ரபிரகட ஆகியோர் பாரதத்தையும் (பக்.15), போதனா, கங்கன, சிங்கன, நாரய்ய என்போர் பாகவதத்தையும் (பக்.47) படைத்துள்ளனர். இராமாயணம், பிறபழங் கதைகளை விடத் தெலுங்கு இலக்கிய ஆக்கத்தில் மிக்க செல்வாக்குக் கொண்டமை, காப்பியம், பிரபந்தம், சித்திர கவிதை, சதகம், தண்டகம், யக்ஷகானம் போன்ற அதன் பல வடிவங்கள் காட்டுகின்றன.

தெலுங்கில் 'பிரபந்தம்' எனக் குறிக்கப்பிடுவனவும் காப்பியமாக எண்ணத் தக்கனவே என்பது குறிப்பிடப்படுகின்றது (பக். 69-70) கிருஷ்ணதேவராயர் காலத்தை ஒட்டிய எண்பெருங்கவிஞர் பிரபந்தச் சிறப்பாசிரியராக அமைகின்றனர். தொடர்ந்து 15-16-17ஆம் நூற்றாண்டுகளும் பிரபந்தக் கவிஞரைத் தருகின்றது.

வீரசைவ சமய இயக்கம், தெலுங்கின் பக்தி இலக்கியத் தோற்றுவாய்க்குக் களம் வழங்கியுள்ளது. தமிழிலுள்ள ஆழ்வார்—நாயன்மார் வரலாற்றின் செல்வாக்கு இங்கு மிகுதியாக அமைவதோடு, 'ஆமுக்த மால்யதா' என ஆண்டாள் சரித்திரம் காப்பிய மானமை குறிப்பிடத்தக்கது. மேலும், தெலுங்கரின் அரசியல், தமிழகத்தில் பரந்த போது, தென்பகுதிகளும் தெலுங்கிலக்கிய ஆக்கத்திற்கு வழி விட்டமை தெரிகிறது' தென்னகத் தெலுங்கு இலக்கியங்கள் தமக்கெனச் சில தனித்தன்மைகளையும் கொண்டிலங்குகின்றன. தஞ்சையின், நாயக்கராட்சியும் மராட்டியராட்சியும் தெலுங்கு இலக்கியங்களைத் தந்ததைத் தொடர்ந்து மதுரையும், புதுக்கோட்டையும், எட்டயபுரமும் தெலுங்கு இலக்கிய வளர்ச்சிக்குக் களன் வழங்கியுள்ளன. தமிழகம் மட்டுமின்றி கன்னட நாடும் (மைசூரும்) இம்மொழி இலக்கிய ஆக்கத்திற்கு வழி தந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்திய இலக்கிய வகை எனத்தக்க சதகம், தெலுங்கில் 500க்கும் மேற்பட்ட நூல்களை ஆக்கி, பக்தி, நீதி, வரலாறு, காதல், தத்துவம், இலக்கணம், நிகண்டு புராணம், நகைச்சுவை ஆகிய பொருண்மைகளைக் கருவாக்கியது.'தெலுங்கு நாடகம் மிகுந்த விரிவான வரலாறும் வகைப்பாட்டுப் பெருக்கமும் உடையதாக அமைகின்றது. குறவஞ்சி, பகல் வேஷம், பொம்மலாட்டம், யக்ஷகானம் போன்ற கூத்தும் குச்சிபுடி போன்ற மேளமும் பழைய நாடக வகைகளாக அமைய, 18ஆம் நூற்றாண்டு முதலான நவீன நாடகம் தேசபக்தி, சமூகச் சீர்திருத்தம் போன்று பலபொருண்மை களில் அமைகின்றது.

தற்கால இலக்கிய வகைகளாகக் கவிதை, நாவல், சிறுகதை, உரைநடை என்பன சிறக்கின்றன. ஒவ்வொரு வகையின் தனிச்சிறப்புற்ற பொருண்மையும், நூலும், ஆசிரியரும், உள்-துணை வகைமைகளும் இந் நூலாசிரியர்களால் தெளிவாகவும், சுருக்கமாகவும் தரப்படுகின்றமை பாராட்டத்தக்கது. 'திகம்பர கவிதை' போன்ற ஒருசில ஒருவேளை தமிழுக்கு அப்பாற்பட்டனவாகலாம்; பிற, தமிழின் தற்கால இலக்கிய நிலையை ஒத்தும் ஒட்டியும் அமைதல் ஓரளவு புலப்படுகின்றது.

நாட்டுப்புற இலக்கியம், இலக்கண நூல்கள் பற்றிய பகுதிகள் இத்துறைகளும் தெலுங்கில் வளமுடையனவாக அமைந்ததைக் காட்டும் இதழ்கள், மொழி பெயர்ப்பு, ஆய்வு, நிகண்டு—அகராதி, இசை நூல்கள், பெண் எழுத்தாளர், கல்வெட்டு தொடர்பான குறிப்புகள் அங்குமிங்கும் நூலில் காணப்படினும் தனிப் பகுதிகளில் மேலும் இவ்வாசிரியர்களால் எழுதப்படும் என எதிர்ப்பார்க்கலாம்.

பொதுவாக, எளிய தெளிந்த மொழிநடையில், தேவையான விளக்கங்களுடன், தெலுங்கு மொழி இலக்கியங்களைத் தமிழ் மாணாக்கர்க்கும் பொதுமக்கட்கும் அறிமுகம் செய்யும் அரிய நூலாக அமைத்து, ஆசிரியர் பாராட்டுக் குரியவராகின்றனர்.

டாக்டர் அன்னி தாமசு

நூல் மதிப்புரை

நூலின் பெயர்: சங்க இலக்கியத்தில் நிமித்தங்கள்

ஆசிரியர் : பேராசிரியர். திருமதி. சுசீலா கோபாலகிருஷ்ணன்,

பதிப்பகம் : பாலாஜி, மதுரை

ஆண்டு : 1987

பக்கம் : 99

விலை : ரூ. 12. 00

மதுரையில் யாதவர் கல்லூரியின் தமிழ்த்துறையில் பேராசிரியையாகப் பணிபுரிபவர் இந்நூலாசிரியர். அவரின் எம்ஃபில் பட்ட ஆய்வேடே இந்நூலாக உருப்பெற்றுள்ளது.

நூலின் அமைப்பு

இந்த நூலில் முன்னுரை, முடிவுரை நீங்கலாக ஐந்து இயல்கள் அமைந்துள்ளன. அவை, நாள் நிமித்தம், புள் நிமித்தம், ஏனைய நிமித்தம், மாந்தர் தொடர்பான நிமித்தங்கள், தெய்வம் தொடர்பான நிமித்தங்கள் என்பன.

சிந்தனைச் சிறப்பு

சங்க காலத்தில் சனிமீன் 'மைம்மீன்', 'கரியன்' எனும் பெயர்களால் சுட்டப் பட்டது. வெள்ளை ஒளிநிறைந்த கோளை 'வெள்ளி' என்றழைத்த பழந்தமிழர், கருமை படர்ந்து ஒளி மங்கிய காரணம் பற்றிச் சனிமீனை 'மைம்மீன்' என்றனர் போலும் (ப. 12) என்று சங்ககாலத் தமிழர் சனிமீனை அழைத்து இருப்பதற்கு ஆசிரியர் காரணம் கற்பிக்கிறார்.

நாள் நிமித்தம்

இவ்வியல் இரண்டாவது இயலாக அமைந்து இருக்கிறது. மணம்புரிதல், வினை மேற்செல்லல் ஆகிய செயல்களுக்கு நன்னாள் பார்க்கின்ற வழக்கம் பழந்தமிழர் இடையே இருந்ததைப் பழந்தமிழ்ப் பாடல்கள் மூலம் புலப்படுத்துகிறார் ஆசிரியர் (ப. 17); சங்கப் பாடல்களிலும், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியவற்றில் இடம் பெற்றுள்ள தீய நிமித்தங்களையும் விளக்கியுள்ளார்.

புள் நிமித்தம்

இந்நூலின் மூன்றாவது இயல் இது. சங்க இலக்கியத்தில் 'புள்' என்பது பறவைகளைக் குறித்தல், நிமித்தங்களைக் குறித்தல், பறவைகள் பற்றிய நிமித்தங்களைக் குறித்தல் என்ற மூவகைப் பொருள் நிலைகளில் ஆளப்பட்டு இருப்பதை ஆசிரியர் விளக்கியுள்ளார் (பக் 20-30). பண்டைத் தமிழர்கள் பறவைகளுடைய குரல், செலவு

முதலியவற்றையும் காக்கை, பருந்து ஆகிய பறவைகள் பலியுணவு உண்ணுதலையும் நாரைகள் உயரப் பறத்தலையும் நிமித்தங்களாகக் கருதினர் என்பதைப் பாடல்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார் (ப. 29).

பிற நிமித்தங்கள்

நான்காவது இயல் பிற நிமித்தங்கள் என்பது. புள் நிமித்தம் நீங்கலாக, பல்லி, ஓந்தி, ஆமா, யானை, குதிரை, பன்றி, நரி, வண்டு பற்றிய நிமித்தங்களும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. அவற்றை 'ஏனைய நிமித்தங்கள்' என்ற தலைப்பில் ஆசிரியர் விளக்கியுள்ளார். மரம், மலர் பற்றிய நிமித்தங்களும் கூறப் பட்டுள்ளன.

மாந்தர் தொடர்பான நிமித்தங்கள்

'மாந்தர் தொடர்பான நிமித்தங்கள் என்பது ஐந்தாவது இயல். விரிச்சி கேட்டல் மாந்தர் எதிர்ப்படல், கண் துடித்தல், வளை செறிதல், கண் கலங்குதல், கனவு முதலியவற்றைச் சங்கப் பாடல்களின் துணைக் கொண்டு ஆசிரியர் விளக்கியுள்ளார்.

தெய்வம் தொடர்பான நிமித்தங்கள்

ஆறாவது இயல் 'தெய்வம் தொடர்பான நிமித்தங்கள்' என்பது. கட்டுப் பார்த்தல், வெறியாடல், கூடலிழைத்தல் என்பனவற்றை ஆசிரியர் கூறியுள்ளார். ஆனால், கட்டுப்பார்த்தலும், வெறியாடலும், கூடலிழைத்தலும் நிமித்தங்களில் அடங்குவதாகக் கூறுவதுதான் பொருத்தமாகத் தோன்றவில்லை. மேலும், அவற் றைத் 'தெய்வம் தொடர்பான நிமித்தங்கள்' என்று தலைப்பிட்டு உள்ளதும் ஆராயத்தக்கது.

ஆராய்ச்சியின் வளர்ச்சியில் ஒரு 'மைல் கல்'

கோ. சுப்பிரமணியப் பிள்ளை, 'Omens and Beliefs of the Ancient Tamils' எனும் கட்டுரையை முதன்முதல் படைத்துள்ளார். அடுத்து, கே. கே. பிள்ளை 'தமிழக வரலாறு—மக்களும் பண்பாடும்' எனும் நூலில் நாள், கோள் நிமித்தங்களைக் கூறியுள்ளார். 'பழந்தமிழ் இலக்கியத்தில் நிமித்தங்கள்' எனும் ஆய்வுக்கட்டுரையை இ. சுந்தரமூர்த்தி படைத்துள்ளார். இவற்றின் விரிவாகவே 'சங்க இலக்கியத்தில் நிமித்தங்கள்' எனும் இந்நூல் அமைந்திருக்கிறது.

அருமையான முயற்சி

சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள நிமித்தங்களை ஆசிரியர் தொகை வகைப்படுத்தி விளக்கியுள்ளார். இருப்பினும், அவர் அவற்றைக் கொண்டு, சமூகப் பண்பாட்டியலில் 'தமிழரின் நிமித்தக் கோட்பாடு' எனும் ஒரு கொள்கையை வகுத்துக் கொடுத்திருந்தால் இவ்வாய்வு மேலும் வலிவும் பொலிவும் பெற்று திகழ்ந் திருக்கும். இந்நூல் விளக்க முறைப் பகுப்பாய்வு நெறியின் அடிப்படையில் செய்யப் பட்ட ஆராய்ச்சியாகத் தோன்றுகிறது.

மு. அ. மாணிக்கவேலு

நூல் மதிப்புரை

நூலின் பெயர் : நர்மதா சங்கர்

ஆசிரியர் : குலாப்தாஸ் ப்ரோக்கர் (ஆங்கில மூலம்)

ஆதவன் சுந்தரம் (தமிழாக்கம்)

வெளியீடு : சாகித்திய அக்காதெமி, புதுடில்லி

ஆண்டு : 1985

பக்கம் : 2+104

விலை : ரூ. 4. 00

இந்திய இலக்கியச் சிற்பிகளை இந்தியர் அனைவருக்கும் அறிமுகப்படுத்தும் சாகித்திய அக்காதெமியின் பயனுறு பணியின் விளைவே இந்நூல். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தலைசிறந்த, குசராத்தி மொழியின் புரட்சிக் கவியைத் தமிழருக்குத் தருகிறது இந்நூல்.

இவ்வரிசையில் அமையும் சாகித்திய அக்காதெமி நூல்கள் பொதுநிலையில் இரு பிரிவுகளாக அமையும். முன்னது புலவரின் பெருமையுறு வாழ்க்கையை வடிக்க, பின்னது அவரது படைப்புகளின் திறனைப் பறைசாற்றும். இப்பாதையினின்றும் விலகிப் பெருமளவு வாழ்க்கை வரலாற்றிற்கே சிறப்பளித்துள்ளது இந்நூல். இலக்கியத் தந்தையாக மட்டுமின்றிப் பெரிய சமூகச் சீர்திருத்தவாதியுமாகப் புலவர் நர்மதா சங்கர்லால் சங்கர் தவே விளங்கியமை இதற்குக் காரணமாகலாம்.

குசராத் மாநிலத்தின் சூரத் நகரில் 1833ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 24ஆம் தேதி பிறந்த கவி நர்மத் எளிய குடும்பத்தைச் சார்ந்தவராவார். கல்வி கற்பதில் காட்டிய அக்கறை, இலக்கிய புலமை பெறுவதில் முனைந்த வேகம் கிடைத்தற்கரி தான நூல்களைத் தேடி அலைந்த விழைவும் முயற்சியும் இன்னோரன்ன சிறப்புகள் கவி நர்மத்தைக் குசராத்தி மொழியின் ஒப்பற்றக் கவிகளுள் முன்னிற்பவராக மாற்றின. 'முயற்சி திருவினை ஆக்கும்' என்பதன் எடுத்துக்காட்டாகக் கவி திகழ்ந் தமையை நூலாசிரியர் நன்கு திறம்படக் காட்டியுள்ளார்.

குசராத்தி இலக்கியத்தின் தற்காலப் படைப்பிலக்கியம் மற்றும் உரைநடை இலக்கியத்தின் தந்தையாகத் திகழும் கவி நர்மத், திறனாய்வுத் துறையிலும் புதிய பாதையினைப் படைத்த முன்னோடியாகப் போற்றப்படுகிறார். எளிய குடும்பத்தில் பிறந்து, நிரந்தரமான வேறு வருவாய்களுக்கு யாதும் வழியற்ற சூழலிலும் தமது 25ஆவது வயதிலேயே தமது பணியைத் துறந்து எழுத்தின் வழிச் சமூகச் சீர்த் திருத்தத்திற்கு முனைந்த செம்மையாளர் இவர். கவியின் இப்போக்கினால் அடைந்த ஏற்ற இறக்கங்களையும், வெற்றி தோல்விகளையும் நயம்படக் காட்டுவதில் வெற்றி கொள்கிறார் ஆசிரியர். எண்ணம் சொல்லானால் மட்டும் போதாது செயலிலும் வேண்டும் என்று வாழ்ந்து காட்டிய இலக்கியப் பெருமகன் கவி நர்மத் உண்மையாகவே இந்தியர் அனைவரும் போற்றுதற்குரிய பெருந்தகையாவார்.

1886இல் மறைந்த கவியின் உழைப்பும், படைப்பும் வீண்போகவில்லை; வழித் தோன்றல்களுக்கு வழிகாட்டியாக அமைந்தன என்பதையும் நூலாசிரியர் தெளிவுறுத்தியுள்ளார். எனினும் கவி நர்மத்தின் படைப்புகள் பற்றிய அறிமுகம் போதுமானதாக இல்லை என்பது ஒரு பெரும் குறைபாடாகவே அமைகிறது. ஆயினும் இக்குறைபாட்டையும் மீறி நூலாசிரியரைப் பாராட்டவும் வேண்டியுள்ளது; அது—வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் ஒரு மகாத்மா என்ற உணர்விலேயே, அவரின் குறைபாடுகளை எல்லாம் மறைத்துப் படைக்கப்படும் படைப்பாளருக்கு இடையே கவி நர்மத்தின் குறைபாடுகள் அனைத்தையும் ஒளிவுமறைவின்றிக் காட்டியுள்ள நூலாசிரியரின் நடுவு நிலைமை.

டாக்டர் ச. சிவகாமி

The Books Published between July 1988 and December 1988

Tolkāppiyam Eccaviyal
A. Sivalinganar
P.N. 142, Rs. 45/- Pages XIX+443

This is the twentieth publication of the project entitled *Tolkāppiyam Nūluraivaḷam.* In addition to the author's explanations of *Eccaviyal* it includes the views of learned scholars who had dealt with the same topic earlier. This work also includes Dr. C. Ilakkuvanar's and Dr. D. Albert's translated versions of the *Eccaviyal* section of *Tolkāppiyam*. No doubt, it helps much in understanding of Tamil grammar, in all its intricacies. The author's attempt at listing the related *Nūṟpas* of the other grammatical treatises with *Tolkāppiya Eccāviyal Nūṟpas,* has to be appreciated.

Tamil Course Cassettes

International Institute of Tamil Studies conducts Tamil Courses for Non-Tamils. In addition to this, it has also prepared six cassettes for Auto Instrutional Course to learn Tamil. The cassettes contain Written Tamil, Spoken Tamil and Drill material which are to be found in the Course Text Book.

BOOKS RECEIVED FOR REVIEW

Cardona, G. 1988 *Panini: His Work and its Traditions,* Motilal Banarsidass, New Delhi.

Hanumanthan, K.R. 1988, *Namakkal Ramalingam Pillai*, Shakitya Academi, New Delhi.

Kalaivani, C. 1988 *Pattirikaikkalai,* Saratha Publishers, North Arcot.

Perumal, A.N. 1988 *Pammal Sambanda Mudaliar*, Shakitya Academi, New Delhi.

Ramaswamy, C.K. 1981 *A.N. Krishnarao* (Tr.), Shakitya Academi, New Delhi.

Rangachari, R. 1988 *Bhavabuthi* (Tr.), Shakitya Academi, New Delhi.

Senapathy, T.N. 1988 *Jnanadevar* (Tr.), Shakitya Academi, New Delhi.

Senapathy, T.N. 1988 *Michael Madusudana Dattar,* (Tr.), Shakitya Academi, New Delhi.

Sourirajan, Pon. 1988 *Tyagarasar,* (Tr.), Shakitya Academi, New Delhi.

Steevar, B.S. 1988 *The Serial Verb Formation in the Dravidian Languages,* Motilal Banarsidass, New Delhi.

Swaminatha Aiyar, R. 1988 *Dravidian Theories,* Motilal Banarsidass. New Delhi.

A System of Transliteration of Tamil

உயிரெழுத்துகள் — VOWELS

குறில்— Short	நெடில்—Long
அ ... a	ஆ ... ā
இ ... i	ஈ ... ī
உ ... u	ஊ ... ū
எ ... e	ஏ ... ē
ஒ ... o	ஓ ... ō

ஐ ... ai
ஔ ... au
ஃ ... h

மெய்யெழுத்துகள் —CONSONANTS

வல்லினம்—Hard	மெல்லினம்—Soft	இடையினம்—Medial
க் ... k	ங் ... ṅ	ய் ... y
ச் ... c	ஞ் ... ñ	ர் ... r
ட் ... ṭ	ண் ... ṇ	ல் ... l
த் ... t	ந் ... n	வ் ... v
ப் ... p	ம் ... m	ழ் ... ḻ
ற் ... ṟ	ன் ... ṉ	ள் ... ḷ

R. No. 30339/72

Books for Review and typed Articles for Publication should be sent in *triplicate*, making use of the system of transliteration indicated on the reverse page, addressed to :

The Editor in-Chief,
Journal of Tamil Studies,
International Institute of Tamil Studies,
C.I.T. Campus,
T.T.T.I. Post, Madras-600 113.
Tamil Nadu, India.

SUBSCRIPTION

		Within India	*Outside India*				
Annual	Rs.	35-00	U.S. $	12	or	Rs.	150
Single Copy	Rs	20-00	U.S. $	7	or	Rs.	85
Life Membership	Rs.	300-00	U.S. $	100	or	Rs.	1250
Institutional Membership	Rs.	500-00	U.S. $	125	or	Rs.	1500

Published by Dr. K.D. Thirunavukkarasu, Editor-in-Chief and Director, International Institute of Tamil Studies, on behalf of the International Institute of Tamil Studies and Printed by Vijay Print Services Madras-600 034. Released in 1989.